
www.tamilarangam.net

# தேசபக்தன்

தமிழீழ மக்களின் முற்போக்கு அரசியல் இதழ் 6



* சிறீலங்கா அரசின் நில ஆக்கிரமிப்பு குடியேற்றங்களை எதிர்ப்போம்!

* தமிழீழ தேசியவிடுதலைப் போராட்டத்தை புரட்சி பாதையில் தொடர்வோம்!

* தமிழ் முஸ்லீம் மக்களே ஒன்றுபட்டு நிற்போம்!

* முஸ்லீம் தமிழ் சிங்கள மக்கள் மீதான எல்லைப்புற படுகொலைகளை கண்டிப்போம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழதேசிய விடுதலை போராட்டமும் முஸ்லீம் மக்களும்.

* காத்தான்குடி, ஏறாவூர், பொத்துவில், அக்கரைப்பற்று வீதி, அழிஞ்சிப்பொத்தானை எனத்தொடங்கி ...... இறுதியாக பொலநறுவையின் ஐந்து எல்லைக் கிராமங்களில் 150க்கும் மேற்பட்ட முஸ்லீம்கள் படுகொலை.

* புலிகளால் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் இருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட தினத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவையும் பொலநறுவை படுகொலையையும் கண்டித்து ஐப்பசி 23ம் திகதி (1992) கறுப்பு தினம் கொண்டாட முஸ்லீம் தலைமை ஏற்பாடு செய்துள்ளது.

* விடுதலைப்புலிகளின் லண்டன் கிளை பொலநறுவைப் படுகொலைக்கு தாம் பொறுப்பல்ல என்றது.

* கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 100க்கும் மேலான மாணவர்கள் இப்படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் " பிரேமதாசா ", " பிரபாகரன் " படங்களை எரித்தும் உள்ளனர்.

* முஸ்லிம்களைப் பாதுகாக்க இலங்கை ராணுவத்தில் முஸ்லிம்களைக் கொண்ட தனிப்படை வேண்டும்.

* அதற்கு 10,000 முஸ்லிம்களைத் தரத்தயார் என அஷ்ரப் கோரிக்கை அரசுக்கு.

* பொலநறுவைப் படுகொலையை விசாரிக்க ஓய்வு பெற்ற வைஸ் அட்மிரல் ஆனந்த டீ சில்வாவைக் கொண்ட தனிநபர் கமிட்டி நியமிப்பு.

* எல்லைக்கிராமங்களைக் காக்க 5000 பேர் கொண்ட புதிய எல்லைக்காவல் படை நிறுத்தப்படும் என்றது அரசு.

* முஸ்லீம் மக்களின் தனித்துவம், பாதுகாப்பு இவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையின் கீழ் முஸ்லீம்களுக்கென ஒரு தனியான சபையை அமைப்பது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது எட்டுத் தமிழ் கட்சிகள் முன்வைத்துள்ள இனப் பிரச்சனையின் தீர்வுக்கான நாலு அம்சக் கோரிக்கைகளுள் ஒன்று.

* அ சு தனது கடமையை செய்யத்தவறும் போது ஆயுதம் ஏந்தும் உரிமை மக்களுக்கு உண்டு.... அஷ்ரப் (முஸ்லிம் காங்கிரஸ்)

* இலங்கையின் அரசியல் வானில் இனப்பிரச்சனை தொடர்பாக நடந்து கொண்டிருக்கும் அமளி துமளிகளுக்கு (அரசியல் கூத்துகளுக்கு) மத்தியில் தொடரும் யுத்தத்திற்கு முன் மேற்பார்த்த செய்திகளும் முன்னெழுந்து நிறகிறது. நாட்டின் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு முன் சிறுபான்மை தமிழ், முஸ்லிம் தேசிய இனங்கள் நிரந்தரமாக மண்டியிட்டு அழுந்தி நிறபதை விரும்புகின்ற இனவாத சக்திகள், தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் காலம் காலமாக இருந்துவரும் நல்லுறவை உடைத்து ஒடுக்கப்படும் இரண்டு சிறுபான்மை இனங்களும் ஒன்றுபட்டு பேரினவாத சிறிலங்கா அரசுக்கெதிராக போராடுவதைத் தடுத்து விட வரலாறு ஒவ்வொரு கட்டங்களிலும் முயன்று வருகிறது. இது சமீப காலமாக வேகப்படுத்தப் பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இத்தகைய பிறபோக்கு இனவாத சக்திகளும் அரசும், தமது போலித் தேசிய, ஆளும் வர்க்க நலன்களை காக்க இனவாத, மதவாத அடித்தளங்களை பலப்படுத்தி மக்களைப் பிரித்து மோத விட்டு தமது அதிகாரத்தை நிலை நிறுத்த ஒவ்வொரு முனை மக்கள் மத்தியிலும் மிகவும் சாதுர்யமாக இயங்குகிறார்கள். சிறுபான்மை தமிழ் முஸ்லீம் இனங்களை அடக்கி ஒடுக்கி அவர்களை எல்லா நிலைகளிலும் பலவீனப்படுத்தி அவர்களுக்கு இடையிலேயே மோதல்களை உருவாக்கி வளர்ப்பதன் மூலம் சிங்கள பௌத்த பேரினவாதத்தை கட்டி வளர்க்கவும் அரசு அதிகாரத்தை அழிவிருந்து நீட்டிக்கவும் ஆன கொள்கையை பிரேமதாச அரசு கடைப்பிடித்து வருகிறது. இதை செயறபடுத்த அரசு இயந்திரங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபடுத்தப் படுகிறது. அரசின் இந்த இனவாத மக்கள் விரோத போக்கிறகு தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் இருக்கும் குறுகிய நோக்கம் கொண்ட மதவாத இனவாத சக்திகளின் செயறபாடுகளை அரசு நன்றாக பயன் படுத்திக் கொள்கிறது.

சிறிலங்கா சிங்கள, பௌத்த, பேரினவாத அரசை எதிர்த்து நிறகும், தமிழ் தேசியத்தின் பக்கம் நின்று யுத்தம் புரியும் 'விடுதலைப் புலிகள் இயக்கம்' கூட அதனை தமிழீழ தேசிய விடுதலைப் போரட்டத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்குமான, வழி முறைகள் குறித்த கொள்கைகளில் குறுகிய பார்வையையே கொண்டுள்ளது. அரசின் திட்டமிட்ட

www.tamilarangam.net

குடியேற்றங்களை, நில ஆக்கிரமிப்புக்களை தடுப்பது எவ்விதம் என்பதிலும் அதே பார்வையையே கொண்டுள்ளது. தமிழீழ எல்லைப் பகுதிகளில் அரசின் சிங்களக் குடியேற்றங்களை தடுப்பதற்கான வழியாக குடியேறும் மக்களை பயமுறுத்தும் செயலாக படுகொலைகளையே செய்கிறது. சுத்த இராணுவ நோக்கில் செய்யப்படும் 'படு கொலைகள்' அரசின் தந்திரங்களுக்கு மேலும் மேலும் சேவை செய்தே வந்திருக்கின்றது. ஆனால் விடுதலைப் புலிகளின் அரசியல் இராணுவ வழியும் குறுகிய பார்வை கொண்ட போராட்ட முறைகளும் போராட்டத்தில் தவிர்க்க முடியாத சில எதிர் மறை பாதக விளைவுகள் என்பதும் இதுவரை இவற்றை அரசே தனக்கு சாதகமாக பயன்படுத்தி வந்துள்ளது என்ற நிலையும் மாறிவிட்டது. தமிழீழ பகுதிகளில் சிறுபான்மை இன மக்களை தமிழ் இனவாதத்தைக் கொண்டும் தனது தனிஇழுக்க சர்வதிகாரப் போக்கை கொண்டும் தண்டிக்க தயாராகிவிட்ட ஒரு நிலையை விடுதலைப் புலிகள் இயக்கம் எடுத்துள்ளது. வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் இருந்து முஸ்லீம் மக்களை 1991 ஐப்பசியில் துரத்தி அடித்தும், தமிழீழ எல்லைப் பகுதிகளில் அரசின் நடவடிக்கைகளை தடுக்க இயலாத போதும், கடந்த கால நடவடிக்கைகளில் இருந்து படிப்பினைகளை பெற்றுக் கொள்ளாததும் எதை வெளிப்படுத்துகிறது? விடுதலைப் புலிகளின் தமிழீழ தேசிய வெறியை, தமிழ் இனவாத முகத்தை, அதனது இராணுவ அராஜக வெளிப்பாடுகளை அம்பலப்படுத்தி இருக்கின்றது. முஸ்லீம் மக்கள் மீதான படுகொலைகளும் துரத்தி அடித்தல்களும் சிறிலங்க சிங்கள பேரின வாதத்திற்கும் அரசுக்கும் எதிரான தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் வளர்ச்சியை அதன் தார்மீக சுயபலத்தை சிதறடிக்க தொடங்கியிருக்கிறது என்பதை தமிழீழ போராட்டத்தின் சம கால நிலவரப் போக்கு பற்றி சிந்திக்கும் விடுதலைப் புலிகள், இயக்கப் போராளிகள் உட்பட யாரும் நிராகரிக்க முடியாது.

சிறிலங்கா அரசு சார்பு நிலை எடுத்து இருக்கும் தமிழ், முஸ்லீம் இன ஆளும் வர்க்க சக்திகளும், மத அடிப்படைவாத பிற்போக்கு சக்திகளும், இனவாத சக்திகளும் தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையில் உள்ள நல்லுறவை ஒடுக்கப்படும் சிறுபான்மை இனங்களின் ஒன்றுபட்ட பலத்தை சிங்களப் பேரினவாத அரசுக்கெதிராக போராடக் கூடிய மக்கள் சக்தியை உழைக்கும் வர்க்கத்தின் தலைமையில் தொடரப்படும் தேச பக்த போராட்டத்தை சீர்குலைக்க, தமது ஆதிக்க வர்க்க கோட்பாடு, பிரித்தாளும் நடவடிக்கைகள் மூலம் உள்ளிருந்தும் வெளியிருந்தும், நேரடியாகவும் மறைமுகமாகவும் முயன்று வருகிறார்கள். இவர்கள் சிங்களப் பேரினவாதத்திற்கு எவ்வழியிலேனும் சேவை செய்து கொண்டிருக்கும் வரை சிறிலங்கா அரசும் கண்டும் காணாதது போல் இருக்கும். இப்படியாக அனைத்து மக்கள் விரோத சக்திகளும். தமது சனநாயக விரோத ஆசைகளை, மக்களைக் கூறு போடும் வழிகளை

www.tamilarangam.net

ஒடுக்கப்படும் சிறுபான்மையின வெகு சனங்கள் மத்தியில் வேருன்றச் செய்வதற்கும், தமிழ் முஸ்லீம் மக்களுக்கு இடையிலான மோதல்களை தூண்டி குளிர் காயத் தீ மூட்டி உள்ளனர். தமிழ் முஸ்லீம் மக்களின் ஐக்கியத்தைக் கட்டிக் காக்கவும், சிறுபான்மை இனங்களின் தனித்துவத்தை அங்கீகரித்து, தமிழீழத் தேசிய விடுதலைப் பாதையை திடப்படுத்தவும் சிறிலங்கா அரசையும் ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்த போராட்டத்தினை வளர்க்க முயலும் புரட்சிகர தேசபக்த சக்திகள் விழித்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையின் வரலாற்றில், சிங்கள பௌத்த பேரினவாதமும் மாறி மாறி ஆட்சிக் கட்டிலில் ஏறிய U.N.P, S.L.F.P ஆகிய இனவாத கட்சிகளும் எவ்வாறு நாட்டில் தமிழ் முஸ்லிம் சிறுபான்மை இனங்கள் மேல் திட்டமிட்ட இன ஒடுக்குமுறையை, நில, குடிசன ஆக்கிரமிப்பை வளர்த்து வந்தன என்பதை கீழ் வரும் 1981ம் ஆண்டு புள்ளிவிபர அட்டவணை தெளிவாக காட்டுகிறது.

# இன ரீதியான குடித்தொகை

## கிழக்கு மாகாணம்

| இனங்கள் | நூறு ஆண்டுகளுக்கு முன் 1881 | பிரிட்டிசார் ஆட்சியைசிங்களவரிடம் ஒப்பூடைப்பதற்கு முதல் ஆண்டு 1946 | கடைசியாக கு சன மதிப்பீடு எடுக் ப்பட்டபதற்கு ஆண்டு 1981 |
|---|---|---|---|
| முஸ்லீம்கள் | 43001 34.5% | 109024 39.0% | 315201 32.2 |
| தமிழர்கள் | 75408 59.1% | 136059 48.0% | 411451 42.4 |
| சிங்களவர்கள் | 5947 4.6% | 27556 9.8% | 243358 24. |

www.tamilarangam.net

## வடக்கு மாகாணம்

| | | | |
|---|---|---|---|
| முஸ்லீம்கள் | 10416 3.5% | 18183 3.7% | 52638 4.7% |
| தமிழர்கள் | 289481 95.6% | 449958 93.8% | 1023229 92.0% |
| சிங்களவர்கள் | 1379 0.4% | 9602 2.0% | 33149 2.9% |

குறிப்பு• 1991 இல் வடக்கு மாகாணத்தில் முஸ்லீம்கள் விடுதலைப் புலிகளால் துரத்தியடிக்கப் பட்டுள்ளார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.

## அம்பாறை மாவட்டம்

| | 1963 | 1981 |
|---|---|---|
| முஸ்லீம்கள் | 98270 46.3% | 161481 41.5% |
| தமிழர்கள் | 50480 23.8% | 79725 20.5% |
| சிங்களவர்கள் | 62160 29.3% | 146371 37.7% |

குறிப்பு 1963 ம் ஆண்டுதான் கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து அம்பாறை மாவட்டம் புதிதாகப் பிரிக்கப்பட்டது. 1981 ம் ஆண்டின் பின்பு இன்று வரை U.N.P அரசால் மிக மிக வேகமாகத் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தின் பெயர் கூட சிங்களப் பெயராக "திகாடுமல்ல" என மாற்றப்பட்டுள்ளது.

இந்த தரவுகளின் அடிப்படையில் பார்த்தால் சிறீலங்கா சிங்கள பேரினவாதமும், அரசும் எவ்வாறு சிறுபான்மை தமிழ் முஸ்லீம் இனங்களை அவர்களது பாரம்பரியப் பிரதேசத்திலேயே சிறுபான்மையாக்க கங்கணம் கட்டிக் கொண்டு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைச் செய்து வந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடியும். இங்கிலாந்திடம் இருந்து அரச அதிகாரம் இலங்கை ஆளும் வர்க்கத்திற்கு 1948 இல் கைமாறியதிலிருந்து திட்டவட்டமான ஒரு அரசு அதிகார பின் புலத்துடன் (1948க்கு முன்னரும் சிங்கள பேரினவாதம் மற்றைய சிறுபான்மை இன, மத மக்கள் மேல் எகிறிக் குதித்திருக்கிறது. 1915 இல் முஸ்லீம் மக்களுக்கு எதிரான முதல் வன்முறை சிறீலங்காவில் நடந்தேறியது.) இன ஒதுக்கல் கொள்கைகளை, இன அழிப்புகளை, அரச பயங்கரவாதத்தை தமிழ் முஸ்லீம் இன மக்கள் முகங்கொடுத்தே வந்திருக்கிறார்கள். 1976ல் புத்தளத்திலும், 1982ல் காலி பாணந்துறை போன்ற சிறீலங்காப் பகுதிகளிலும் முஸ்லீம் மக்கள் அரச பயங்கரவாதத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இன மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் பல கட்டங்களைத் தாண்டி, ஆயுதப் போராட்டத்தை தொட்டபோதும், தமிழீழம் தனியாக பிரிவது என்ற நிலையை எடுத்த நிலையிலும் முஸ்லீம் மக்கள் அதனை ஆதரித்தனர். நூற்றுக்கணக்கான முஸ்லீம் இளைஞர்கள் தமிழீழ தேசிய இயக்கங்களில் இணைந்து போராட முன் வந்தனர்.

சமீப கால முஸ்லீம் மக்கள் மேலான படுகொலைகளும் பதிலடியாக தமிழ் மக்கள் மேலான படுகொலைகளின் மூலம் இவ்விரு இன மக்களின் ஒற்றுமையை உடைக்க முனைந்து செயற்படும் பிற்போக்கு சக்திகளின், வர்க்கங்களின் நோக்கங்களை வழிகளை நாம் தெளிவாகக் கண்டு கொள்ள வேண்டும். அப்போது மட்டும் தான் இப்பிரச்சனைக்கு சரியான தீர்வைக்காண முடியும். தமிழ் முஸ்லீம் மக்களின் ஐக்கியத்தை மீண்டும் எதார்த்தத்தில் நிலை பெறச் செய்ய முடியும். சிறிலங்கா அரசு, சிங்கள ஆளும் வர்க்க அரசியல், பொருளாதார பிரதிநிதியாகவும், அந்நிய ஏகாதிபத்திய நாடுகளின் விசுவாசம் மிக்க தரகனாகவும் இருந்து வருகிறது. இதனால் முழு இலங்கை மக்களையும் திறந்த பொருளாதாரக் கொள்கை மூலம் அந்நிய ஏகாதிபத்திய சர்வதேச நிறுவனங்கள் சுரண்டவும் கூடவே உள் நாட்டு ஆளும் வர்க்கம் மேலும் மக்களைக் கொள்ளையடிக்கவும், ஒட்டச் சுரண்டி கொழுக்கவும் இசை வான அரசியல் பொருளாதார கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகிறது. உள்நாட்டில் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கும் மற்றைய சிறுபான்மை இன ஆளும் வர்க்கங்களுக்கும் இடையிலான பொருளாதாரப் போட்டியில் சிங்கள ஆளும் வர்க்கம் அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது போட்டியாளர்களை வெற்றி கொள்வதும், (இதைத்தான் சுதந்திர முதலாளித்துவ வளர்ச்சிப் போட்டி எனக் கூறுகிறார்கள்?) அதே வேளை உள் நாட்டில் இன, மத பேதமின்றி சுரண்டப்படும் மக்கள் ஆளும் வர்க்கத்திற்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிராக தமது சமூக வளர்ச்சிக்கும், பொருளாதார அரசியல் விடுதலைக்கும், ஒன்றுபட்டுப் போராடுவதைத் தடுக்கும் நோக்கிலும் பிரதானமாக நாட்டின் பெரும்பான்மை சுரண்டப்படும் சிங்கள மக்களை ஏனைய சுரண்டப்படும் இன மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தவும் என இரண்டு நிலைகளில் சிங்கள ஆளும் வர்க்கமும், அரசும் சிங்கள பௌத்த இனவாதத்தை தமது வாழ்வின் ஆதாரக் கொள்கையாகக் கொண்டு இன மத வாதத்துடன் இரண்டறக் கலந்து நிற்கிறது. சிறிலங்கா அரசின் இந்த இனவாத முகமூடிக் கொள்கை ஏகாதிபத்தியக் கொள்கைக் காரர்களுக்கும் பல சமயங்களில் பாதுகாப்பானதாக உள்ளது.

www.tamilarangam.net

ஆகவே இலங்கையில் இனவாதத்தின் தலைவர்களும் காபந்துக் காரர்களும் சிறிலங்கா அரசும், அதன் ஆளும் அரசியல் கட்சிகளும் தான் சிங்கள ஆளும் வர்க்கம் தன்னை வளர்க்கவும் பாதுகாக்கவும் சூடிக் கொண்ட இனவாதமே இன்று அதனது அழிவுக்கான வழியையும் தோற்றுவித்துள்ளது.

இலங்கையின் சமூக முரண்பாடுகளுள் சிறீலங்கா அரசும் தமிழீழ தேசிய இன மக்களுக்கும் இடையிலான தேசிய இன முரண்பாடு பிரதான முரண்பாடாக மாறியதிலிருந்து தமிழீழ தேசிய இன மக்களின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய புரட்சிப் பாதையின் முக்கிய வழியாகிறது. இந்நிலையில் ஒடுக்கப்படுகின்ற சிறுபான்மை இனங்களுக்கு இடையிலான் உறவு புதிய தன்மையைப் பெற்றிருந்தது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் சிங்கள இனவாத சிறீலங்க அரசாலும், ஏகாதிபத்தியங்களாலும் ஒடுக்கப்படும் எல்லா இன மக்களையும் மக்கள் பிரிவுகளையும் இன ஒடுக்கு முறைக்கு எதிரான அணியில் ஒருமைப்படுத்த வேண்டியிருந்தது. விசேடமாக தமிழீழ எல்லைப் பகுதிக்குள் வாழும் சிறுபான்மை முஸ்லீம் இன மக்களின் தனித்துவங்களைக் கணக்கில் கொண்டு சமத்துவமான ஐக்கியப்பட்ட ஒரு அரசியல் பாதையை வகுத்து செயல்பட வேண்டி யிருந்தது. இந்நிலையில் சிறீலங்க பேரினவாதத்தின் ஒடுக்குமுறைக்கு எதிரான முஸ்லீம் மக்களின் எதிர்ப்புக்கள், போராட்டங்கள் தமிழீழ தேசிய விடுதலைப் பாதையில் இணைந்து விடுகிற நிலையை நோக்கி நகர்ந்துள்ளது. குறிப்பாக தமிழீழ தேசிய இனத்தின் போராட்டம் அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் என்ற நிலையை அடைந்து விட்டது. முஸ்லீம் இன மக்களும் தமிழ் தேசிய இனத்துடன் ஒன்றுபட்டுப் போராடும் நிலை உருவாகியுள்ளது. ஒடுக்கப்பட்ட இரண்டு இனங்களும் விடுதலை யுத்தத்தில் ஐக்கியப்பட்டு விடாதபடி சதிகளைச் செய்வதும் பிரித்தாளும் சூழ்ச்சியை உருவாக்கி விடுவதும், சிறீலங்க இனவாத அரசுக்கு மிகவும் அவசியப்பட்டது. இதற்காக முஸ்லீம் ஆளும் வர்க்கத்தின் சில பகுதியினருக்கு அதிகளவு சலுகைகளை கொடுத்து தொடர்ந்தும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. ஆனால் இன ஒடுக்குமுறைக்கும் நில ஆக்கிரமிப்புக்கும் உள்ளான வடக்கு கிழக்கு முஸ்லிம் விவசாயிகளின் எழுச்சியானது (இதனை அஷ்ரப் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்) சிறீலங்கா சார்பு (கொழும்பு சார்பு) முஸ்லீம் ஆளும் வர்க்கத் தலைமைகளின கைகளையும் மீறி தமிழீழ தேசியப் போராட்டத்தை ஆதரிக்கின்ற ஒன்று படுகின்ற போக்கு வெளிப்பட்டது.

தமிழ் முஸ்லீம் இன மக்களுக்கு இடையிலான ஒன்றுபடுதலைத் தவிர்க்க, சிறீலங்கா அரசு இரண்டு தந்திரங்களைக் கையாண்டது. ஒன்று முஸ்லீம்

www.tamilarangam.net

மக்கள் முன்னிருந்த சுய நலத் தலைமைகளுக்கு சலுகைகளைக் காட்டி அரவணைத்து அதன் மூலம் பிரித்தாள்வது. இரண்டு நேரடியாக தானே தலையிட்டு மோதல்களை உருவாக்குவது, அதற்கான வழிகளை உருவாக்குவது. இதன் ஒரு வெளிப்பாடு தான் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுடன் இணைத்து முஸ்லீம் குடியேற்றங்களையும் (பொலநறுவை, மட்டக்களப்பு எல்லைப்புற பகுதிகளில் இதுவரை 25 கிராமங்களில் இது உருவாக்கப்பட்டுள்ளது. ) திட்டமிட்டு நடத்துகிறது. இக்குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு என்று கூறி ராணுவத்தை நிறுத்துகிறது. அரசு தனது" கொலைப் படைகளைக்" (ராணுவமோ பொலிசாரோ அல்ல ஊர்க்காவல் படை, கறுப்புப் பூனைப்படை, இவைதான் 1989ம் ஆண்டளவில் J.V.P போராளிகளை ஒடுக்கிறோம் என்ற போர்வையில் அப்பாவிச் சிங்கள மக்களையும் மாணவர்களையும், இளைஞர்களையும் கணக்கற்ற முறையில் மிகக் கோரமாகப் படுகொலை செய்தது. ) கொண்டே முஸ்லீம், சிங்கள மக்கள் மேல் படுகொலைகளை நடாத்தி விட்டு தமிழீழப் போராளி இயக்கங்கள் மேல் பழி போட்டு இரண்டு விதமான இலாபங்களைப் பெற்றுக் கொள்கிறது. ஒன்று இன ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டங்களைக் கொச்சைப்படுத்துவது. தமிழ் முஸ்லீம் மக்களை, தமிழ் சிங்கள மக்களை நிரந்தரமாக பிரிக்க முயற்சிப்பது. இத்தந்திரம் ஆரம்ப காலங்களில் சிறீலங்கா அரசுக்கு மிகவும் கடினமாகவும் தன்னைத்தானே அம்பலப் படுத்துவதாகவும் இருந்தது. ஆனால் விடுதலைப் புலிகளின் சிங்கள முஸ்லீம் மக்களின் மேலான " மொசாட் " பாணிப் படுகொலைகள் (அநுராதபுரம், ஏறவூர்) அரசுக்கு மிகவும் வாய்ப்பானதாக அமைந்து விட்டது. அரசு மேலும் தன்னைச் செழுமைப்படுத்தி, பல திட்டமிட்ட படுகொலைகளைச் செய்து விட்டு தப்பிதுக கொள்ளவும், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்தவும் வழி காண்பித்துக் கொடுத்தது. புலியைக் காட்டி சிங்கமும் சிங்கத்தைக் காட்டி புலியும் மாறிமாறிச் செய்யும் படுகொலைகளால் பாதிக்கப்படும் மக்களிடம் இருந்து தோன்றும் எதிர்ப்புணர்வுகளை, இனக்கசப்புகளை சிறீலங்கா அரசே நன்கு பயன்படுத்தி தமிழ் , முஸ்லீம் ஒற்றுமைக்கு வேட்டு வைக்கும் பிரச்சாரத்தை உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் (குறிப்பாக முஸ்லீம் நாடுகளிலும்) கட்டவிழ்த்து விட்டு பயன் பெறுகிறது. பாதிக்கப்பட்ட தமிழ் முஸ்லீம் மக்களிடம் இருந்து தோன்றும் தன்னியல்பான எதிர்ப்புக்களை பயன்படுத்தி குண்டர் கூட்டத்தை நிறுவி படுகொலைகளை அரசே பின்னின்று நடத்துகிறது. அழிஞ்சிப் பொத்தானை முஸ்லீம் மக்கள் படுகொலையும் பதிலுக்கு முத்துக்கல், கரப்பொல தமிழ் மக்கள் படுகொலையும் இந்த உண்மையை நமக்கு வெளிப்படுத்தும் வரலாற்றுச் சம்பவங்களாகும். சிறிலங்கா அரசுக்கு அது போன்ற கைங்கரியப் படுகொலைகளைச் செய்ய அரசுடன் சேர்ந்து நிற்கும் தமிழ்த் துரோக இயக்கங்களின் சிதறிய இராணுவக் குழுக்களும் நபர்களும்

www.tamilarangam.net

உதவுவதாகவும் சில செய்திகள் உள்ளதும் கவனிக்கத்தக்கது. அதே போல் தமிழ் மக்களுக்கு எதிராகப் போராடுவது " மத நிலைப்பட்ட ஒரு புனிதப் போர் " என முஸ்லீம் மத அடிப்படை வாதக் குழுக்கள் சில முஸ்லீம் மக்களை தவறான வழிக்குத் திசை திருப்பி ஒரு சீரழிந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். இதுவும் அடிப்படையில் சிறீலங்கா இனவாத அரசுக்குச் சேவை செய்வதாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த, இருக்கும் முஸ்லீம் மக்கள் தாங்கள் முகங்கொடுக்கும் ஒடுக்கு முறைகளுக்கு தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம், விடுதலையையும் சுதந்திரத்தையும் சுய பாதுகாப்பையும் கொடுக்கும் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசிய இன மக்களுடன் ஒன்றுபட்டுப் போராடி வந்துள்ளனர். (உதாரணம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின், தேசிய விடுதலைப் போரில் களப்பலியான முதல் இஸ்லாமிய வீரத் தமிழ் மறவன் லெப்டினன் 'ஜீனைத்தீனுக்கு' காணிக்கையாக " இஸ்லாமியத் தமிழரும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்" என்ற நூல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.)

ஆனால் முஸ்லீம் மக்களின் அந்த மகத்தான நம்பிக்கையை, எதிர்பார்ப்பை நிறைவேற்றும் விதத்தில் எந்த தமிழீழத் தேசிய இயக்கங்களாலும் முஸ்லீம் மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக தங்களை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை. இந்த ஆயுதப் போராட்டத் தலைமைகள், கூட்டணியின் கையாலாகாத்தனத்தையும் முஸ்லீம் மக்கள் மத்தியில் இருக்கும் கொழும்பு சார் சுயநலவர்க்கவாதிகளின் ஏமாற்றுக் கதைகளையும் முறியடித்து தமிழ் முஸ்லீம் மக்களின் ஐக்கியத்தை தோண்டியெடுத்து கோட்டை கட்டுவதைப்பற்றி கதையளந்தவர்கள் இன்று தமிழ் மக்களின் தேசியக் கனவுகளைக்கூட மிதித்துக்கொண்டிருப்பது வேதனைக்குரிய விடயம். இதற்கான காரணங்களுள் ஒன்று, முஸ்லீம் மக்களின் தனித்துவத்தையும் அவர்களது சமூக பொருளாதார, அரசியல் கலாச்சார பிரச்சனைகளின் முழுத்தோற்றத்தையும் கண்டு அதன் பின்னணிகளை அங்கீகரித்து, உளப்பூர்வமாகவே அம்மக்கள் மத்தியில் தங்கி நின்று அவர்களது பொதுப் பிரச்சனைகளையும் குறிப்பான பிரச்சனைகளையும் தமிழீழத் தேசியக் கோரிக்கைகளையும் இணைத்து செயற்படவில்லை. முஸ்லீம் மக்களுக்கு அவர்களது இனத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள எதிரிகளை அடையாளம் காட்டாது தமிழீழம், தமிழ் முஸ்லீம்கள், இஸ்லாமியத் தமிழர்கள் என்ற மேலெழுந்த கண்ணோட்டத்துடன் தமது ஏக போக அதிகாரத்தை நிறுவுவதற்கு முஸ்லீம் மக்கள் மத்தியில் இருந்து சில நபர்களையே பொறுக்கி எடுத்திருந்தனர். மொத்தத்தில் சிங்களப் பேரினவாத அரசின் ஒடுக்குமுறைக்கெதிரான முதலாவது பெரிய சிறுபான்மை இனமான

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய இனமும் இரண்டாவது சிறுபான்மை இனமான முஸலீம இனமும் தத்தமது தனி- விசேட தன்மைகளுடன், உரிமைகளுடன் ஒன்றுபட்டு ஒடுக்கும் பெருந்தேசியவாத சிறிலங்கா அரசிற்கு எதிராகப் போராடவேண்டியுள்ளது. இதில் ஒடுக்கப்படும் இரண்டு சிறுபான்மை இனங்களுக்கிடையே நிலவும் உறவு நிலைகளை விளங்கிக் கொண்டு இரு இன மக்களையும் தமிழீழக் கோரிக்கைக்கு கீழ் ஒன்றுபடுத்திச் செல்லும் தகைமை வாய்ந்த அரசியல் கொள்கைகளோ, பிரச்சாரங்களோ அமைப்பாக்கல்களோ நடைபெறவில்லை. இத்தேசிய இயக்கங்கள் தமிழ் மொழி பேசும் இஸ்லாமியத் தமிழர்கள், தமிழ் மொழி பேசும் மலையகத்தவர்கள் என்ற கண்ணோட்டத்தில் முஸ்லீம்களும் மலையக மக்களும் வடக்கு கிழக்கு பாரம்பரிய தமிழ் மக்களுடன் ஒன்றுவிட்ட தமிழ் தேசிய இனம் என்ற நிறுவுதலை முன்வைத்தனர். சில இயக்கங்கள் இன்னும் ஒரு படி மேலே போய் மலையக மக்கள் வாழும் பிரதேசங்களை உள்ளடக்கி தமிழீழ வரைபடத்தை வரைந்தும், வேறு சில இயக்கங்கள், மலையக மக்கள் அப்படியே குடிபெயர்ந்து வந்து, அல்லது குடிபெயர்த்து வடக்கு கிழக்கு எல்லைப் புறங்களில் குடியமர்த்துவது பற்றியும் தமது சிந்தனையை வெளிப்படுத்திக் காட்டினர். சிங்களப் பேரினவாத சிறீலங்கா அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை வடக்குக் கிழக்கு பாரம்பரியத் தமிழர்களே முன்னின்று நடாத்துவதால் "ஒன்றுபட்டு விட்ட தமிழ்த் தேசிய இனத்தின்" ஏகப்பிரதிநிதிகளும் தாங்கள்தான் என்ற எண்ணத்தையும் வெளிப்படுத்தினர். உதாரணமாக திம்புப் பேச்சுவார்த்தையின் போது ஒரு முஸ்லீம் போராளியை தமது இயக்கப் பிரதிநிதித்துவத்துள் உள்ளடக்கியதன் மூலம் முஸ்லீம் மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக தமது இயக்கம் இருப்பதாக PLOT இயக்கத் தலைமை தம்பட்டம் அடித்தது நினைவுகூரத்தக்கது. சிங்கள பெருந்தேசிய வாதத்தினாலும் அரசாலும் ஒடுக்கப்படுகின்ற தனித்துவம் கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட இனப்பிரிவுகளை (தமிழர்கள், முஸலீம்கள்,மலையகத் தமிழ் மக்கள்) அவர்களின் சமூக, பொருளாதார, வாழ்நிலைப் பின்னணிகளாலும் பூகோள இணைப்புகளாலும் கூட இயற்கையாகவே விசேட உள்ளடக்கங்களை கொண்டுள்ளபோதும் இனவாத அரசிற்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான போராட்டத்தில் பல இனப் பிரிவுகளை ஒன்று படுத்துவதற்கான கொள்கையை முன்வைத்து செயற்படுவதற்கு பதில் ஒடுக்கப்படுகின்ற தேசிய இனங்களில் பெரிய தேசிய இனம், போராடுகின்ற தேசிய இனம் என்ற பலத்தைக்கொண்டு மட்டும் அனைத்து ஒடுக்கப்படும் சிறுபான்மை இனங்களின் ஏக பிரதிநிதித்துத்தை தமதாக்கிக் கொள்வது என்ற குட்டி முதலாளிய சிந்தனை முறைதான் தமிழ்த் தேசிய இயக்கங்களை வழி நடாத்தி வந்திருக்கிறது.

www.tamilarangam.net

## ஒடுக்கும் சிங்கள தேசிய இனத்தின் பரந்துபட்ட மக்கள் பற்றி

சிறிலங்கா சிங்கள பேரினவாத அரசு தன்னை சிங்கள மக்கள் மத்தியில் நிலை நிறுத்திக்கொள்ள இனவாதத்தையும் பெளத்த மதவாதத்தையும் தூக்கிப் பிடித்துள்ளது. சிங்களப் பெரும்பான்மை மக்களின் சமூக, அரசியல் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு காரணம் சிங்கள முதலாளி வர்க்கமும் ஏகாதிபத்தியமும் என்பதை மறைத்து, மற்றைய தேசிய இனங்களே எனக்காட்டுவதும், ஏனைய தேசிய இன மக்களுடன், தொழிலாளி, விவசாயி வர்க்கங்களுடன் பெருந்தேசிய இனத்தின் சுரண்டப்படும் சிங்கள மக்கள், தொழிலாள, விவசாய வர்க்கம் ஐக்கியப்பட்டு விடாதபடி தடுப்பதும் முக்கிய அம்சம். இதில் சிங்கள ஆளும் வர்க்கமும் அரசும் தொடர்ந்து வெற்றி பெற்றே வந்திருக்கிறது. "சிங்கள பெளத்த பேரினவாதம்" சிங்கள மக்கள் மத்தியில் ஒரு ஜனரஞ்சகவாத நிலையிலேயே தன்னை ஸ்திரப்படுத்தியுள்ளது. இனவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் இடது வலதுகள் உட்பட எல்லோரும் 'ஜனரஞ்சகவாதத்திற்கு' பலியாகி விட்டார்கள் என்பதுதான் வரலாறு. சிறிலங்காவில் உள்ள புரட்சிகர இடதுசாரி சக்திகள் இது விடயத்தில் தெளிவாக இருக்கின்ற போதும் மிகவும் பலவீனமாகவே இருக்கின்றுர்கள் என்பது கவனிக்கப் படவேண்டும். இன்று பரந்துபட்ட சிங்கள மக்கள் இனவாதத்துள் மூழ்கடிக்கப் பட்டுள்ளார்கள். தங்கள் சமூக வளர்ச்சிக்கு, தேசிய சுயாதிபத்தியத்திற்கு உண்மையான எதிரிகள் யார் என்பதை கண்டுகொள்ள முடியாமல் தடுமாறுவதும் தங்கள் எதிரிகளுக்கு எதிராக போராடும் ஒடுக்கப்பட்ட தமிழீழத் தேசிய இன மக்களது போராட்டத்தையே எதிரியாக காணவைக்கப் பட்டுள்ளார்கள். அரசாலும் ஆளும் வர்க்கத்தாலும் இன்வாத, மதவாத மந்திரக் கோல்களால் நேர்த்தியாகக் கட்டப்பட்டுள்ளார்கள். சிறீலங்கா அரசு தமிழீழ தேசிய இன மக்கள் மேல் தொடுத்திருக்கிற இனவாத யுத்தத்தை ஒரு புனித யுத்தமாக, சிங்கள மக்களின் விடுதலை யுத்தமாக, முழு நாட்டின் அமைதிக்கான இறுதியுத்தமாகக் காட்டி அப்பாவி சிங்கள மக்களை சிறீலங்கா அரசும், ஆளும் வர்க்கமும் ஏமாற்றுகிறது. யுத்த வரியை அறவிடுவதன் மூலமும் யுத்தத்திற்கு தேவையான மனித வளத்தை சிங்கள மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதனுடன் தனது ஆளும் வர்க்க நலனை அந்நிய ஏகாதிபத்திய சார்பை, பரந்துபட்ட சிங்கள மக்களின் நலனுகக் காட்டி முதலாளிவர்க்க அரசயந்திரத்தை காக்கிறது. உண்மையில் பரந்துபட்ட சிங்கள மக்களை இன்னமும் இன, மதவாத மாயைக்குள் அழுத்தி வைத்திருப்பதன் மூலம் தான், தமிழீழ தேசிய இன மக்கள் மீது தொடர்ந்து ஒரு தேசிய ஒடுக்குமுறை யுத்தத்தை நடத்த முடிகிறது. தமிழீழ தேசிய இன மக்களின் விடுதலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டத்தை தொடரும் சக்திகள் ஒவ்வொன்றும், பரந்துபட்ட சிங்கள மக்களுக்கு சிறிலங்கா ஆளும் பேரினவாதிகளதும் ஏகாதிபத்தியங்களினதும் முகத்திரையை அகற்றிக்காட்ட வேண்டும். இது இரண்டு வழிகளில் செய்யப்பட வேண்டும். முதலாவது அரசியல் கொள்கை ரீதியாக சிறிலங்கா அரசும் ஆளும் வர்க்கமும், ஏகாதிபத்தியங்களும் எமது எதிரிகள் என்பதையும், சிங்கள மக்கள் எமது நண்பர்கள் என்பதையும், எமது எதிரிகளே அவர்களதும் உண்மையான எதிரிகள் என்பதையும் புரிய வைத்து எதிர்த்துப் போராடும்படி கோரவேண்டும்.

இதை நாம் எல்லா நிலைகளிலும் மேற்கொள்ளும் பிரச்சாரங்கள், கிளர்ச்சிகள் மூலம் சிங்கள பரந்துபட்ட மக்களின் உணர்வு நிலையில் மாற்றத்தை கொடுக்கும்படி செய்ய வேண்டும். இரண்டாவது, அரசுடன் நாம் நடத்தும் யுத்தத்தின் விளைவாக அரசு சிங்கள மக்கள்மேல் நடாத்தும் பொருளாதார நெருக்கடிகளையும் யுத்தத்தில் ஏற்படும் மனித வள இழப்பும் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணும். இதன் ஆழமான தன்மையை பரந்து பட்ட சிங்கள மககள் புரிந்து, சிங்கள அரசு மீதும், ஏகாதிபத்தியங்கள் மீதும் மக்கள் எதிர்ப்புக்களை தெரிவிக்கும் போராட்டங்களை வழிநடாத்த வேண்டும். இது தொடர்ச்சியான யுத்தத்தின் நிகழ்ச்சிப் போக்கில் நடக்கும். ஆனால் இதை வழிப்படுத்தி அரசுக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டை கூர்மைப்படுத்துவது என்பதும், அவர்கள் எதிரியை எதிர்த்து நடாத்தும் போராட்டங்களை ஆளும் வர்க்கத்தின் வேறு பிரிவுகள் பயன்படுத்தி விடாது, புரட்சிகர திசை வழியில் வளர்ப்பதும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஆதரிக்கச் செய்வதும், இறுதியில் தமிழீழத் தேசியப் போராட்டத்தில் நிற்கும் தேச பக்த புரட்சிகர சக்திகளுடன் ஒன்று பட்டுப் போராடுவது என்பதும் திட்டமிட்ட அரசியல் அமைப்பு வழியில் இருந்து செய்யப்பட வேண்டும்.

நமது கடந்த பத்தாண்டு யுத்த அனுபவம் தந்திருக்கும் பாடம் வேறு ஒன்றாக இருக்கிறது. சிறிலங்கா அரசை எதிர்த்து, யுத்தத்தில் முழு பங்கு வகித்து வரும் விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசுக்கும் சிங்கள பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொண்டு செயற்படவில்லை. இங்கும் தமிழ் தேசிய வெறியாகவும் குறுக்கு வழித்தந்திரங்களாகவுமே வெளிப்பட்டது. அப்பாவிச் சிங்கள மக்களை பல கட்டங்களில் பலியெடுத்திருக்கிறது. சிங்கள மக்களை படுகொலை செய்வதன் மூலம் அரசுக்கு நெருக்கடியை உருவாக்கலாம் என நம்பிச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அது சிங்கள மக்கள் அரசு மேல் வெறுப்படைய ஒரு வேகமான வழி என நினைக்கின்றது. எல்லைப்புறங்களில்

www.tamilarangam.net

உள்ள தமிழ் மக்கள் அரசை எதிர்த்து கிளம்புவதற்கும் கெரில்லாக்களாக மாறுவதற்கும் கூட சிங்கள மக்கள் மேலான தாக்குதல்கள் பயன்படுத்தப்படுகிறது. மொத்தத்தில் சிங்களக் குடியேற்றங்களை தடுக்கும் ஒரே வழியாக குடியேற்றச் சிங்களவர்களை கொலை செய்வதே வழி என பல குறுக்கு வழி நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. ஆனால் இவை எதுவும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன் தள்ளிச் செல்லவும் இல்லை . தமிழீழ மக்களின் போராட்டம் நியாயமானது என்ற உணர்வை சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்துவிடவும் இல்லை. உள்ளபடியே சிறீலங்கா அரசுக்கு எதிராக சிங்கள மக்களை திட்டமிட்டு திருப்பி விடவும் இல்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு முற்போக்கு தேசிய இயக்கமாக கூட உள்நாட்டு மக்களும், வெளிநாட்டு மக்களும் அங்கீகரிப்பதற்கு பதில் ஒரு தமிழ் இனவாத இயக்கமாகவும் பாசிசப் புலிகளாகவுமே அங்கீகரித்து இருக்கின்றனர். LTTEயின் சிங்கள் மக்களைப் பற்றிய குறுகிய பார்வையும் அதன் குறுக்கு வழி சுய நல நடவடிக்கைகளும் சிறீலங்கா அரசு, சிங்கள தேசிய இனத்தின் பரந்துபட்ட மக்களுக்கும் ஒடுக்கப்பட்ட தமிழீழ தேசிய இன மக்களுக்கும் இடையில் கட்டியெழுப்ப முயலும் இனவாத சுவரை இன்னும் இறுக்கமாக்கும் நிலைக்கே தள்ளியுள்ளது.

சிறிலங்கா பேரினவாத அரசுக்கு எதிராக ஒடுக்கப்படும் தமிழீழ தேசிய இனத்தின் பக்கம் நின்று போராடும் தேசிய சக்திகளில் ஒன்றானதும், ஒடுக்குமுறைக்கு எதிரான யுத்தத்தில் தனிப்பங்கை தொடர்ந்தும் வழங்கும் 'விடுதலைப் புலிகள் இயக்கம்' அதனது இராணுவ அரசியல் கொள்கைகளில், செயற்பாடுகளில் பல்வேறு குறைபாடுகள் இருந்தாலும் அரசுக்கெதிராக யுத்தத்தில் ஈடுபடும் ஒரு சக்தியாக இருக்கிறது என்பது புறநிலை உண்மை. தமிழ்த் தேசியத்தின் ஆதிக்கவர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இவ்வியக்கம் தனது மிதமிஞ்சிய தேசிய வெறியாலும், ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்திடம் இருந்த கிளம்புகின்ற இனவாதப் போக்கையும் கூட பிரதிநிதித்துவம் செய்கிறது. இதன் விளைவு ஒடுக்கப்படுகின்ற சிறுபான்மை இன முஸ்லீம் மக்கள், ஒடுக்கும் பெருந் தேசிய இன பரந்துபட்ட சிங்கள மக்களின் மேல் தாக்குதலை நடத்துகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரே பிரதிநிதி தானகை இருக்கவேண்டும் என்ற ஆதிக்க அகங்காரத்தில் இருந்து தமிழீழ தேசியததின் பல்வேறுபட்ட வர்க்கங்களின் இன ஒடுக்குமுறைக்கு எதிரான மக்களின் போராடும் ஜனநாயக உரிமைகளை அடக்குகிறது. போராடும் சக்திகளை தடைசெய்து அழிக்கிறது. இவையெல்லாம் சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளின் எதிரிகளுக்கும் ஒரு விதத்தில் பலம் சேர்க்கும் செய்கைகள் என்பதை உணரத் தவறுகிறது. சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக தமிழ் மக்கள் பக்கம்

www.tamilarangam.net

நின்று, போராடும் தமிழ் முதலாளி வர்க்கமும் அதை இ
பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப்புலிகள் இயக்கமும் பல பிறபோ
அம்சங்களுடன் காணப்படுவதனாலேயே, அதனது போராட்ட வழிமுறை
அனைத்து இன மக்களையும் அணிதிரட்டி பேரினவாத எதிர்ப்பு ஏகாதிபத்
எதிர்ப்பு தமிழீழ புரட்சிகர போராட்டமாக அமையாமல், சிறிலங்
அரசுடன் பேரம் பேசும் அதிகாரத்துக்கான ஒரு போராட்டமாக
உள்ளது.

இது போன்றதொரு சூழ்நிலைமையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள
பாட்டாளி வர்க்கத்தின் பார்வை, தேசிய ஒடுக்கு முறைக்கு எதிர
போராடும் புரட்சிகர தேசபக்த இயக்கத்தின் கடமை: பிரதான எதிரிகள
சிறிலங்க சிங்கள இனவாத அரசுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிர
நிற்கும் அனைத்து வர்க்க சக்திகளையும் ஓர் அணிக்குள் நின்று போர
வழி செய்வதும், இதற்கு தடையாக இருக்கின்ற வர்க்க சக்திக
அவர்கள் சிறீலங்கா அரசுக்கு எதிராக போராடிக் கொண்டிருந்த
எக்காரணம் கொண்டும் அது சிங்கள மக்கள், முஸ்லீம் மக்கள் மேல
தாக்குதல்களோ, சக போராட்ட சக்திகளை அழிப்பதை காரண
காட்டியோ பிரதான எதிரியான சிறீலங்கா அரசுடன் அதனை சமப்படுத்
பார்த்து எதிரான வேலைகளில் ஈடுபடக் கூடாது. பதிலுக்கு விடுதலை
புலிகளின் நடவடிக்கைகளை குறிப்பாக எடுத்து விமர்சனம் செய்வது
கண்டிப்பதும் அதன் தாக்கங்கள் போராட்டத்தை எவ்வாறு பாதிக்கின்ற
பாதிக்கப்பட்ட மக்களை திசைவிலகி செல்ல வைக்கிறது என்பன
தெளிவாக கூறவேண்டும்.

அடுத்து விடுதலைப் புலிகள் தான் இன்று யுத்தம் புரிகின்ற ஒரேயொ
சக்தி என்ற காரணத்தால் அவர்களது மிக மிக மோசமான போராட்டத்த
திசைதிருப்பி விடக்கூடிய, பலவீனப்படுத்துகின்ற நடவடிக்கைக
எதுவானாலும் அதை விமர்சிப்பதும் கண்டிப்பதும் மக்களுக்கு எடுத்து
சொல்வதும் சிறிலங்கா அரசுக்கு சாதகமாக அமைந்து விடும், என்
பூச்சாண்டி காட்டுவதும் நடந்து கொண்டிருக்கிறது. முஸ்லீம் மக்க
வடக்குப் பகுதிகளில் இருந்து வெளியேற்றுவதும், எல்லைப்புற சிங்கள
கிராமங்களில் படுகொலைகளை நடத்துவதும், தமிழ் தேசிய விடுதலை
போராட்டத்தில் இருக்கும் முற்போக்கு ஜனநாயக சக்திகளை அழிப்பது
தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன் கொண
செல்லுமா? இந்த பிறபோக்கு அம்சங்களை நாம் விமர்சிக்கின்றோமே
இல்லையோ இந்நடவடிக்கைகள் சிறிலங்கா சிங்கள பேரினவாத அரசுக்
ஒரு சாதகமான ஒரு அம்சமேயாகும்.

ஆகவே நாம் தமிழீழ தேசிய சுதந்திர போராட்டத்தில் உறுதியாக நின்

www.tamilarangam.net

போராடிக் கொண்டு, விடுதலைப் புலிகளின் சிறிலங்கா அரசுக்கெதிரான போராட்டத்தை ஆதரித்து பிரதான எதிரிக்கெதிரான போரை கூர்மைப்படுத்த வேண்டும். அதனது போராட்டத்தை பலவீனப்படுத்தும் செய்கைகள், ஒடுக்கப்படும் தமிழ் முஸ்லீம் மக்களின் ஐக்கியத்தை குலைத்துவிடும் நடவடிக்கைகளை விமர்சித்து, கண்டித்து பிரதான எதிரியை எதிர்த்து சரியான பாதையில் நின்று போராடுமாறு கோர வேண்டும். இது விடுதலைப் புலிகளுக்கு புத்தி புகட்டுவதற்கு மட்டுமல்ல, சிறிலங்கா அரசுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டத்தில் ஒடுக்கப்படும் அனைத்து இன மக்களின் ஐக்கியத்தையும், போராடும் சக்திகளையும் ஒன்றுபடுத்தி போராட்டத்தில் உள்ள சுயநல ஆதிக்க, அதிகார வர்க்க, சமரச சக்திகளை போராட்டப் போக்கினூடே பெரும்பான்மை மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தவும், போராட்டததை முற்போக்கு புரட்சிகரப் பாதையில் வளர்த்து வெற்றி கொள்ளும் வழியாக உழைக்கும் மக்களின் தேசிய போராட்டப் பாதை அமைய வேண்டும். அதுவேதான் நாம் செய்ய வேண்டியதுமாகும்

* தமிழ் முஸ்லீம் இன மக்களின் ஐக்கியத்தை பேணுவோம்!
* தமிழ் ஈழ தேசபக்த புரட்சிப் பாதையில் ஒன்றுபடுவோம்!
* முஸ்லீம் தமிழ் சிங்கள மக்கள் மீதான எல்லைப்புற படுகொலைகளை கண்டிப்போம்!
* சிறிலங்கா அரசுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான சிங்கள மக்களின் புரட்சிகர போராட்டத்துடன் ஒன்றுபடுவோம்

www.tamilarangam.net

# தூசு படிந்த துப்பாக்கிகளை சுத்தப்படுத்த.......

முத்தையா யாதவனுக்கு
முகம்மது யாசீர் எழுதுவது
அன்ப.
மழையை உணர்ந்து புது
மனை தேடும் எறும்பாய்
ஆயுதங்களுக்கு எண்ணெய் தடவி
அடுத்த களம் செல்ல
ஆயத்தமாவாய்
என
எண்ணுகிறேன்.

எனது வார்த்தைகள் உனக்கு
இடைஞ்சல் எனினும்
எமக்கு அவசியம்.

உனக்கு அரசு பிரச்சனை
எனக்கோ
அரசுகள் பிரச்சனை
இன்றைய நிலையில் நீயும்
எனக்கு அரசேதான்.

தேவைப்படுகையில்
நானும் உன் தேசியம்
இல்லையேல் நான்
ஏதும் இல்லாத தேசியமா?

இராணுவத் தொல்லைக்கு
இந்தியத் தமிழகம்
இருக்குது உனக்கு அடைக்கலமாய்

நானோ
இருப்பிடத்திலேயே
இருந்தால் (?) வாழ்வே:-1

www.tamilarangam.net

ுப்போ நீயே
ன்னே
டுத்தெறிந்திட்டால்
ன்ஞல் என்ன செய்ய இயலும் ? ......

ான், நீ என்று
பிரிந்த வார்த்தைகள்
பிறப்பதாய் நினைக்காதே

் என்னே
பிறத்தியாஞய்
தூரத்தும் போது........

அன்ப
கைக் கூலிகளால்
கசக்கப்படுவது
நானும் நீயும்
நம்மவர் குழாமும் தான்
அத்துடன்
நீயே என்னே
நிர்க்கதியாக்கிஞல்........

அன்ப
உன்னில் ஒருவஞய்
என்னேயும் ஏற்று
என் உணர்வையும்
மதிக்கத் தெரிந்தால் (?)
சொல்!

நானும் வருகிறேன்
தூசி படிந்த
துப்பாக்கிகளை
துப்பரவாக்க்
சுத்தப்படுத்த.

*ராஜேந்திரன்*

www.tamilarangam.net

வெளியீடு:

தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம்

PATRIOTIC VANGUARD'S ORGANIZATION OF THAMILEELAM

( PVOT )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசபக்தன்

## தமிழீழ மக்களின் முற்போக்கு அரசியல் இதழ் 8






சோமாலியாவின் பஞ்சத்தை, பட்டினிச்சாவை, உள்நாட்டு யுத்தத்தை, போக்கிய உள்நாட்டு
யுத்தத்தை 'நிறுத்துவது' என கூறிச்சென்ற "அய்நா சமாதானப்படை" இன்று
அமெரிக்க ஆக்கிரமிப்பு படையாக செயற்படுகிறது. சோமாலிய மக்கள் ஏகாதிபத்திய
ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடநிர்ப்பந்திக்கப்படுகிறார்கள், போராடுகிறார்கள்.
தமிழீழ பிரச்சனையில் அய்நா, அய்நா சமாதானப்படை, அல்லது மீண்டும்
இந்தியா தலையிட கோருபவர்களுக்கு ஒரு முன்னறிவித்தல், எச்சரிக்கை "
சோமாலிய நிலவரம்"



| முகாம்கள் | குடும்பங்கள் | மொத்தப்பேர் | ஆண்கள் | பெண்கள் | பாடசாலை மாணவர் | 1-12 வயதுக் குட்பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| சரஸ்வதி மண்டப முகாம் | 211 | 515 | 292 | 223 | 56 | 139 |
| முகத்துவாரம் முகாம் | 101 | 252 | 130 | 122 | 75 | 77 |
| பிள்ளையார் கோயில் முகாம் | - | 540 | - | - | 108 | |

வாசகர்களே! "தேசபக்தனை" தவறாது கைமாற்றி உதவுங்கள்:
சக தோழர்களின் கைகளுக்கு
பங்களியுங்கள்.

அதிகார பூர்வ வெளியீடு: மக்கள் கலை அச்சகம்
தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம் ( த. தே. மு. க.)
PATRIOTIC VANGUARD'S ORGANISATION
OF TAMILEELAM (PVOT)

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

****************************

## பாலஸ்தீனமும் ............ தமிழீழமும்

****************************

உலக அளவில் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான, தேசிய சுதந்திரத்துக்கான விடுதலைப் போராட்டங்களுக்கு "பாலஸ்தீன மக்களின் ஆயுதம் தாங்கிய தேசிய விடுதலைப் போராட்டம்" ஒரு முன்னுதாரணமாக போராடும் மக்களால் பேசப்பட்டது. தமிழீழ மக்கள் இஸ்ரேலிய யூத இனவெறியரசை சிறீலங்கா இனவெறியரசுடன் சமப்படுத்தி பார்த்தார்கள். இந்த இனஒடுக்குமுறையரசுகளுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் சர்வதேச தலைவன் என்பதை கண்டுகொண்டார்கள். ஒடுக்கும் இனவெறியரசுகளை அதன்பின்னால் இருக்கும் அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியங்களை எதிர்த்து போராடினார்கள். பாலஸ்தீன மக்களின் தேசிய சுதந்திர போராட்டத்தை ஆதரித்தனர். தமிழீழ தேசிய சுதந்திர போராட்டடத்துக்கு அம்மக்களின் ஆதரவை கோரினர். அரசியல் நட்புறவுகளை வளர்த்தனர்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாறியதில் இருந்து பாலஸ்தீன மக்களின் போராட்டத்துடன் நெருங்கிய உறவுகள் வளரத் தொடங்கியது. இன அழிப்பு, இனஒடுக்குமுறை அரசுகளுக்கு எதிரான தேசிய இனங்களின் சுதந்திரம் தேசிய அரசு நிறுவுவதற்கான ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப்போராட்டங்கள் என்ற அரசியல் உறவுடன் நிற்கவில்லை. நீண்ட ஆயுதப் போராட்ட வரலாற்று அநுபவம் கொண்ட பலஸ்தீன விடுதலை இயக்கங்களுடன் ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பாதைகள், கொள்கைகள் செயற்பாடுகள் குறித்த உறவுகளிலிருந்து ஒத்த கருத்துக்கொண்ட பாலஸ்தீன–தமிழீழ இயக்கங்கள் இராணுவ [redacted] விவகாரங்கள், திட்டமிட்ட அமைப்பு வேலைகள் வரை தமக்கிடையிலான சகோதரத்துவ உறவுகளை பேணி வந்தன.

பாலஸ்தீன மக்களும், தமிழீழ மக்களும் உள்நாட்டு இனவெறி அரசுகளை ஏகாதிபத்தியங்களை எதிர்த்து தேசிய சுதந்திரத்துக்காக போராடிக்–கொண்டிருக்கும் வேளையில், அமெரிக்க ஏகாதிபத்தியம் தனக்கு கீழ்படிய, கட்டுப்பட மறுக்கும் அரபு உலகநாடுகள் மீது குறிப்பாக ஈராக் மீது தன் யுத்தவெறியை தீர்த்துக் கொண்டிருக்கும்போது, இஸ்ரேல் இராணுவம் "இஸ்புல்லாஹ் இயக்கத்தின் மீது தாக்குவதாக கூறி தெற்கு லெபனான் மக்கள் மீது குண்டு மழைபொழிந்து ஆயிரக்கணக்கான மக்களை அகதிகளாக்கிய வேளையில், கடந்த ஆண்டு இஸ்ரேல் நாடுகடத்திய 400 பாலஸ்தீன அகதிகள் திருப்பி எடுக்கப்படாத நிலையில், மத்திய கிழக்கு சமாதான பேச்சுவார்த்தையில் பங்குவகித்துவந்த சிரியா, லெபனான், ஜோர்டான் நாடுகளை விலக்கி வைத்துவிட்டு பாலஸ்தீன இயக்கமும் –இஸ்ரேல் அரசும் எல்லாவற்–றையும் மறந்து, மறுத்து , ஒதுக்கிவிட்டு 'தோன்றாத் தலைவன்' நார்வே அரசின் உதவியுடன் மிக மிக இரகசியமாக விரைவாக பேச்சுவார்த்தை நடத்தி வந்தமுடிவு...

அமெரிக்க தலைநகரில் இம்மாதம் 13 ம் திகதி 'யுத்தவெறியன்' கிளிங்டன் தலைமையில் 3000 இராஜதந்திரிகள் முன்னிலையில் தேசியக் கொடி, தேசியக் கீதம், மரியாதை இன்றி "பாலஸ்தீனிய–இஸ்ரேலிய சமாதான ஒப்பந்தம்" நடந்தது. (இதை ஒரு புரட்சி(?) என்று கிளிங்டன் வர்ணித்தார்.)

பாலஸ்தீன மக்களின் துன்ப துயரங்களுக்கு, அவர்களது இலட்சியகொள்கைக்கு அய்ம்பது50 ஆண்டுகளாக சிந்தும் இரத்த வெள்ளத்துக்கு இந்த ஒப்பந்தம் ஏதாவது தீர்வைக்கண்டிருக்கிறதா? இல்லை ... இல்லவே... இல்லை.

www.tamilarangam.net

பாலஸ்தீன இயக்கத்தின் வெளியுறவு அமைச்சர் சொல்கிறார்: "பாலஸ்தீன மக்களின் அடிப்படைக் கோரிக்கையான 'சுயநிர்ணய உரிமை' அங்கீகரிக்கப்படவில்லை, சுதந்திரமான பாலஸ்தீனம் அங்கீகரிக்கப்படவில்லை, உலகெங்கும் தாயகம் பற்றிய கனவுகளுடன் சிதறி வாழும் பாலஸ்தீன அகதிகள் தாயகம் திரும்ப உத்தரவாதமளிக்கப்படவில்லை இந்தப்பிரச்சனைகளை எல்லாம் கொலை செய்துவிட்டு அழித்துவிட்டு 'பாலஸ்தீன இயக்கம் மட்டுமே' அங்கீகரிக்கப்பட்டுள்ளது"

இந்த ஒப்பந்தம் 'காசா' 'ஜெரிக்கோ' பகுதிகளுக்கு "தற்காலிக தன்னாட்சியை" வழங்குவதாக கூறுவதுதான் மிச்சம். இப்பகுதிகளில் கல்வி பண்பாடு, சுற்றுலா, சுகாதாரம், பொலிசு இவைதான் இந்த தன்னாட்சி கவுன்சிலுக்கு கட்டுப்பட்டவை. மீதி எல்லாம் இஸ்ரேல் வசம். காசா, ஜெரிக்கோ பகுதிக்கு பத்து மாதத்தில் தேர்தல் நடத்தப்படும், 2 ஆண்டு 5 மாதத்தில் இஸ்ரேலியப்படைகள் இங்கிருந்து படிப்படியாக வெளியேறும் அதுபற்றி பேசப்படும், இந்த ஒப்பந்தத்தை அமுலாக்கும் காலமாக 5 ஆண்டுகள் குறிக்கப்பட்டுள்ளது. அரபாத் கூறுவது போல் "பாலஸ்தீன மக்களின் வரலாற்றில் இது முக்கிய கட்டம்" முழுக்க உண்மை பாலஸ்தீன மக்கள் தமது பாதை முன்னேறவேண்டிய பாதையை வெகுவிரைவில் வெளிப்படுத்திக்காட்டுவர். இந்த ஒப்பந்தம் பாலஸ்தீன மக்கள் வேண்டி நின்ற, கேட்டு போராடிய உரிமைகள் எதையும் அவர்களுக்கு வழங்கவில்லை எனவே அவர்களது உறுதிமிக்க தேசிய சுதந்திர போராட்டம் தொடரும் என்பது தெளிவு.

இதன் தொடக்கமும் வெளிப்பட்டிருக்கிறது பி.எல்.ஓ வின் செயற்குழுவில் ஒப்பந்தத்தை கண்டித்து 4 முக்கிய உறுப்பினர் வெறியேறியுள்ளனர். இதில் முக்கியமானவர் வெளியுறவு அமைச்சர். பரூக் கடாமி. காசா பகுதியில் பலம் வாய்ந்த இயக்கம் "கமாஸ்" பாலஸ்தீன மக்களுக்கு எதிரான ஒப்பந்தம் என்று கூறியுள்ளதுடன் அதை எதிர்த்து வெகுஜன கிளர்ச்சிகளும் நடத்தியுள்ளது. ஈரான், லெபனான் மக்கள் மத்தியில் ஆதரவு பெற்ற "இஸ்புல்லா இயக்கம்" ஒப்பந்தத்துக்கு எதிரான கிளர்ச்சியில் இஸ்ரேல், அமெரிக்க, லெபனான் அரசுகளை, பாலஸ்தீன தலைமையை எதிர்த்து சுலோகங்களுடன் ஊர்வலம் நடத்தியிருக்கிறது. இஸ்ரேல் மீது இராணுவ எதிர்ப்பையும் காட்டியிருக்கிறது. ஜோர்ச் அப்பாஸ் தலைமையிலான முற்போக்கு தேசபக்த இயக்கம் ஒப்பந்தத்தை கண்டித்திருப்பதுடன், பாலஸ்தீன மக்களின் இஸ்ரேலிய யூதவெறி எதிர்ப்பு அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் தொடரும் என பிரகடனப்படுத்தியுள்ளது. ஜோர்டான் நாட்டிலுள்ள 'வக்காமில்' 15000 பாலஸ்தீன அகதிகள் ஒப்பந்தத்தை எதிர்த்து கிளர்ச்சி நடத்தியுள்ளனர்; தொடரப்போகும் போராட்டத்துக்கு மக்கள் முன்னறிவிப்பு செய்துள்ளனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியமும், இஸ்ரேலிய சியோனிச அரசும் பாலஸ்தீன போராட்டத்தில் புதிய தந்திரத்தை கையாண்டு இருக்கிறது. தங்களை எதிர்த்து வந்த மொத்த பாலஸ்தீனிய மக்களின் இயக்கங்களின் ஒட்டுமொத்த பலத்தை அரபாத் மூலம் நசுக்கிவிட்டிருக்கிறார்கள், சிதைத்துவிட்டுள்ளார்கள். பாலஸ்தீனத்துள் இயக்கங்களிடையே ஒரு உள்நாட்டு யுத்தத்தை உருவாக்கி விடுவதன் மூலம் போரில் தேக்கத்தையும் திசைமாற்றத்தையும் ஏற்படுத்தி போராட்டத்தை அதன்மீதான மக்கள் நம்பிக்கையை உள்ளுக்குள்ளாக கருவறுக்க வழிசமைத்திருக்கிறார்கள். நெஞ்சுறுதியும் நீண்ட போராட்ட அனுபவம் உள்ள பால்ஸ்தீன மக்கள் என்னசெய்வார்கள் என்பது தெளிவு ஆனால் யாசர் அரபாத் என்ன செய்வார். என்பதை பொறுத்து பார்க்கவேண்டும். தமிழீழ மக்களும் போராளிகளும் பாலஸ்தீன மக்களது தேசிய சுயநிர்ணய உரிமையை, தேசிய அரசு நிறுவுவதற்கான போராட்டத்தை தொடர்ந்தும் ஆதரிப்பார்கள் என்பது திண்ணம்.

www.tamilarangam.net

உலகின் ஒவ்வொரு மூலையிலும் நடக்கும், வெடித்தெழும் தேசிய விடுதலைப் போராட்டங்களை நசுக்க, அடக்கியொடுக்க ஏகாதிபத்தியங்களும் பிற்போக்கு இனவாத அரசுகளும் அசுர வேகத்தில் செயல்படுகிறார்கள். இன்று மாறியுள்ள சர்வதேசிய, தேசிய சூழ்நிலைமையில் 'புதிய உலக ஒழுங்கை' உருவாக்கிவரும் அமெரிக்க ஏகாதிபத்தியம், விடுதலைப் போராட்ட களங்களிலுள்ள மிதவாத, சமரசவாத, அதிகாரத்துவ போராளித் தலைமைகளை இலகுவாக தனது சர்வதேசிய தொடர்புகள் மூலம் நிர்ப்பந்தப்படுத்தி பணியவைத்து இயக்கங்களுக்கும் - அரசுகளுக்கும் இடையில் ஒப்பந்தங்களை உருவாக்கிவிடுகிறது. தனது பலமிக்க சர்வதேச தொடர்பு சாதனங்கள் மூலம் அதை 'சமாதான ஒப்பந்தம்' எனப்பிரச்சாரம் செய்துவிடுகிறது. போராட்ட களங்களிலுள்ள மேற்பார்த்த தன்மை கொண்ட இயக்கங்கள் தமது சனநாயக விரோத, மக்கள் விரோத, சுத்த இராணுவவாத செயல்பாடுகளால் எதிரிகளின் தந்திரங்களுக்கு பலியாகி தீரவேண்டிய அகநிலைத் தேவையில் உள்ளார்கள். தேசிய சுதந்திரத்துக்காக போராடவேண்டிய சகோதரர்களைக் கொண்டே தேசிய சுதந்திரத்துக்காக, [redacted] மக்கள் சனநாயகத்துக்காக போராடும் போராளிகளை அழிக்க முற்படுகிறது. அழிக்கிறது. போராட்டத்தை ஒடுக்குகிறது. மக்கள் போராட்டங்களின், தியாகங்களின் பலாபலன்களை குறைப்பிரசவமாக்கிவிடுகிறது. ஏகாதிபத்தியங்களின், விரிவாதிக்கவாதிகளின், உள்நாட்டு பிற்போக்கு அரசுகளின், சமரசவாத தலைமைகளின் இந்த தந்திரத்தை தேசியம், சனநாயகம் இவற்றுக்காக போராடும் தேசபக்த போராளிகள் முறியடித்தாகவேண்டும். இதற்கு தமிழீழ மக்களின் தேசிய சுதந்திர போராட்டத்தில் உறுதியாகவிருந்து போராடுவதும், உணர்வு பூர்வமாக ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தை நடத்துவதும், பரந்துபட்ட மக்களின் சனநாயக கோரிக்கைகளை சரியான முறையில் தேசியக் கோரிக்கையுடன் ஒன்றிணைத்து முன்னெடுப்பதும், போரில் மக்களை ஆயுதபாணியாக்குவதும், சொந்தநாட்டு மக்களிலும், அகில உலக மக்களின் ஆதரவிலும் தங்கி நிற்பதும் மிக மிக முன்நிபந்தனையாகவிருக்கிறது. இதைஉணர்வுபூர்வமாக ஏற்றுக்கொள்ளும் நடைமுறையில் செயல்படுத்தும் சக்தி, ஆற்றல் ஒரு முற்போக்கு தேசபக்த புரட்சிகர சனநாயக அமைப்புக்கு மட்டுமே உண்டு. அதை உருவாக்கி வளர்ப்பது நமதுகடமையாகிறது.

பாலஸ்தீனத்தில் நடந்துள்ளது போன்ற ஒரு 'திருவிளையாட்டை' 'சமாதான ஒப்பந்தத்தை' தமிழீழ பிரச்சனையில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களும் "தோன்றாத் தலைவர்களால்" அரசுகளும் சத்தம் சந்தடியின்றி தலையிட்டு சிறீலங்கா அரசையும் - புலிகள் இயக்கத்தையும் அத்தகையதொரு நிலைக்கு கொண்டுவர முயற்சிக்கலாம். இது எதிர்பார்க்கக்கூடியது.

* தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத
* வடக்கு கிழக்கு இணைந்த தமிழீழ தாயகப்பகுதியை உறுதிப்படுத்தாத
* தமிழ், முஸ்லீம் அகதிகளின் சொந்தவாழ்விட உரிமையை உத்தரவாதப்படுத்தாத

எந்த வகையான சமாதானத்தையும், ஒப்பந்தத்தையும் எந்தக்கொம்பன்கள் ஏற்படுத்திக்கொண்டாலும் தமிழீழ மக்கள் எதிர்த்து போராடுவார்கள். "புலிகளின் தாகம், தமிழீழ தாயகம்" இதில் உறுதியாகவுள்ள புலிகளும் போராடுவர். புரட்சிகரமான தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டம் பாலஸ்தீன மக்களின் போராட்டத்துடன் தோளோடு தோள்நிற்கும்.

-ஆசிரியர் குழு-

www.tamilarangam.net

www.tamilarangam.net

*******************************************

**தமிழீழ அகதிகளை நாடுகடத்தும் விவகாரத்தில்**
**மீண்டும் அம்பலப்படும் இந்திய ஆட்சியாளர்கள், தமிழ்த்துரோகிகள்.**

*******************************************

சிறீலங்கா சிங்கள இனவாத அரசின் இன ஒடுக்கு-முறை யுத்தத்தால் தமது சொந்த வாழ்விடங்களைவிட்டு, உடமைகளை இழந்து, உற்றார் உறவினர்கூட இன்றி நிற்கதியாக நிற்கும் இலட்சணக்கான தமிழீழ அகதிகள் இலங்கையிலும், இந்தியாவிலும் அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளில் எதிர்காலம் பற்றிய அச்சத்துடன் இருப்பது தெளிவு. '1983 தமிழின படுகொலைக்கு' பின் இந்தியாவில் இருந்துவரும் தமிழீழ மக்கள் இந்திய அரசால் 'அகதி அந்தஸ்து' கூட அளிக்கப்படாத நிலையில் 'அகதிகள்' என்ற புனைபெயருடன்இருக்கின்றனர். இவர்கள் அரசால் உருவாக்கப்பட்ட நிவாரண முகாம்களிலும், வெளியுலும் வாழ்கின்றனர். 1992 இல் இந்திய அரசு முகாமில் வாழ்ந்து வந்தவர்களை சிறீலங்கா அரசுடன் ஏற்படுத்திய தீட்டப்படாத ஒப்பந்தத்தின்கீழ் 'நாடுகடத்தும்' திட்டம் ஒன்றை அமுல்படுத்த தொடங்கியது. இதற்கு "சுய விருப்பத்துடன் அனுப்புவது" என பெயர் சூட்டப்பட்டது. சிறீலங்கா அரசின், படைகளின் எத்தகைய கொடுமைகளுக்கு விரட்டியடித்தலுக்கு பயந்து நாட்டை விட்டு வெளியேறி தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தனரோ அதற்கான காரணங்கள் ஒன்றும் தீர்க்கப்படாத நிலையில் இந்திய அரசின் நிர்ப்பந்தங்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் இந்திய ஆட்சியாளர்களின் "சுயவிருப்பத்தின் பேரில் நாடுகடத்தும் திட்டத்துக்கு பலியாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்" இசையவைக்கப்படுகிறார்கள். 29000 தமிழீழ மக்கள் கடந்த ஆண்டு திருப்பியனுப்பபட்டார்கள்; இவர்களில் 5000 மக்கள் இனமும் சிறீலங்கா அரசின் அகதி முகாமில் இருக்கிறார்கள். 12000 மக்கள் சிறீலங்கா அரசின் முகாமிகளில் அனுமதிக்கப்படாமலும் சொந்த வாழ்விடங்களுக்கு திரும்ப முடியாத யுத்த நிலமையில் நடுத்தெருவிலும் காட்டிலும் அலைந்து கொண்டு சொல்லொனா துன்பதுயரங்களுக்கு முகங்கொடுக்க இங்கும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்திய மத்திய மாநில அரசுகள் மீண்டும் தமிழீழ மக்கள் மேல் இரண்டாம் கட்டநாடுகடத்தும் தாக்குதலை தொடுத்துள்ளனர். இந்நாடுகடத்தும் திட்டத்துக்கு எந்தவித மனிதாபிமனமும் அற்றமுறையில் கொடுக்கப்பட்ட நேரடி மறைமுக நிர்ப்பந்தங்கள் மூலம் 7000 மக்களை 'சுயவிருப்புடன் நாடுகடத்த' தொடங்கியுள்ளனர். அய்ந்து கோடிக்கு மேல் தமிழர்கள் வாழ்கின்ற தமிழ் நாட்டில் உலகத் தமிழர்களின் தாயகம் என்கின்ற தமிழ்நாட்டில் எந்த பெரிய எதிர்ப்பும் இன்றி ஜெயா-ராவ் தமிழின விரோத கும்பலால் நாடு கடத்தப்படுகிறார்கள். இதுவரை 3000 தமிழர்கள் தமிழர் அழிப்பு யத்தத்தை நடத்தும் சிறீலங்கா அரசிடம் கையளிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கொடுமையை மனிதாபிமானம், மொழியுணர்வு, பண்பாட்டு உணர்வு ஏன் மனிதநேயம் கொண்ட ஒவ்வொருவரையும் சிந்திக்கத்தூண்டுகிறது, இந்திய ஆட்சியாளர்களின் தமிழீழ விரோத நடவடிக்கைகளை பின்நோக்கி பார்க்க வைக்கிறது.

இலங்கையில் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக போராடும் மக்களை, போராளிகளை 83-87 க்கு இடைப்பட்ட காலத்தில் இந்திய ஆட்சியாளர்களும் அரசும்பிரச்சாரம், ஆயுதம் , பயிற்சி, நிதி எனஆதரித்தார்கள். 1987 இந்திய-இலங்கை (துரோக) ஒப்பந்தத்தின் பின்னர் தொடர்ந்தும் தமிழீழ தேசிய விடுதலை விடுதலைக்காக போராடுபவர்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் அடக்கி ஒடுக்க தொடங்கியது. 87.90 இடைப்பட்ட காலத்தில் நேரடியாக இந்திய அரசு தமிழீழ தேசத்தின் மேல் எல். ரி. ரி. ஈ போராளிகள் மேல் ஆக்கிரமிப்பு யுத்தத்தை கட்ட-விழ்த்து விட்டது.

www.tamilarangam.net

தமிழீழ அக்கிரமிப்பு யுத்தத்தில் தோல்வி கண்டு 90இல் பின்வாங்கியது. போராளிகளை 'பயங்கரவாதிகளாக' 'தீவிரவாதிகளாக' தனது எல்லா தொடர்பு சாதனங்கள் மூலமம் சித்தரிக்க தொடங்கியது...... தமிழ் நாட்டிலிருந்த போராளிகளை மூர்க்கத்தனமாக ஒடுக்கியது. சிறப்பு முகாம்களில், சிறைகளில் பிடித்து போட்டது. தமிழீழ அதரவாளர்களை 'தடாவில்' 'தேசிய பாதுகாப்பு' சட்டத்திலம்' 'சிறைகளில் தள்ளியது.

இந்திய ஆட்சியாளர்கள் 'பயங்கரவாதிகளை' அவர்களது 'ஆதரவாளர்களை' அடக்குவதாகவும், அப்பாவி தமிழீழ மக்களை ஆதரிப்பதாகவும் கூறி போராளிகள் மீதான முதல்கட்ட தாக்குதலை நிறைவேற்றியது. போராளிகளை பெருமளவில் கட்டுப்-பாட்டுக்குள் கொண்டுவந்த தீமிரில் "ராஜீவ்" கொலையைக் காட்டி தமிழ்நாட்டிலுள்ள அதே அப்பாவி தமிழீழ மக்கள் மேல் தனது ஒடுக்குமுறையை தொடக்கியது, 'மக்களை நாடுகடத்தும்' துரோகத்துள் நுழைந்தது. தமிழர்களை ஒடுக்குவதில் சிறீலங்கா இனவாத அரசுக்கு இந்திய ஆந்தப்பார்ப்பன அரசு சளைத்ததல்ல என்பதை இன்று உலகுக்கு அறிவித்து செயல்படுகிறது.

தமிழீழ அகதிகள் பின்னணி
---

கடந்த பத்தாண்டுகளாக சிறீலங்கா அரசும் முப்படைகளும் வடக்கு கிழக்கு தமிழீழ மக்கள் மேல் திட்டமிட்டு நடத்தி வரும் இனவொடுக்குமுறை யுத்தத்தால் தங்கள் உறைவிடங்களை, உடமைகளை, சொந்தபந்தங்களை இழந்து சொந்த நாட்டிலேயே 500000 மக்கள் அகதிகளாக வாழநிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். 1990இல் மீண்டும் தொடங்கிய உள்நாட்டு யுத்தத்தால் வடக்கு கிழக்கை விட்டு வெளியேறிய தமிழீழ மக்களுக்காக (90 அக்டோபரில் 24 மணி நேர கெடுவில்-யாழ்ப்பாணம் மன்னார் மாவட்டங்களில் இருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட தமிழீழ முசுலீம் மக்களும் இதனுள் அடங்குவர்) சிறீலங்கா அரசாங்கமே 10 க்கும் மேற்பட்ட அகதி முகாம்களை திறந்து வைத்துள்ளது. இப்போது அம்முகாம்கள் சிலவற்றை மூடி அங்குள்ள மக்களை பலாத்காரமாக மட்டக்களப்பு, புத்தளம், அம்பாறை பகுதிக்கு 'புதிய முகாம்களுக்கு' அனுப்பிவருகிறது. அரசும் நிவாரண திணைக்களமும் இதற்காக வலிந்து முயற்சித்து வருகிறது. இந்நிலையிலம்மாணிக்கப்பிள்ளையார் கோவில், விவேகானந்தசபை மண்டபம், முகத்துவாரம், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டப முகாம்கள் தமிழர்களுக்-காகவும், மாளிகாவத்தை, குப்பியாவத்தை, காக்கைத் தீவு முகாம்கள் தமிழ் முசுலீம் மக்களுக்காகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. சிறிய புள்ளி விபரம் இதோ!

| முகாம்கள் | குடும்பங்கள் | மொத்தம் | ஆண் | பெண் | மாணவர்கள் | 1-12 வயது |
|---|---|---|---|---|---|---|
| * சரஸ்வதி | 211 | 515 | 292 | 223 | 56 | 139 |
| ** முகத்துவாரம் | 101 | 252 | 130 | 122 | 75 | 77 |
| * பிள்ளையார் கோயில். | | 540 | | | 108 | |

விவேகானந்தசபை முகாம் மூடப்பட்டபோது மக்கள் போக மறுத்தனர். சிங்கள பொலிசாரும் அதிகாரிகளும் அகதிகளின் உடமைகளை தூக்கி விசிறியடித்தனர், தாக்கினர், வாய்மூலம் தமது துயரத்தை தெரிவித்து எதிர்ப்பு தெரிவித்தவர்களை பலமாக அடித்து நொருக்கினர். உண்ணாவிரதம் இருந்த அகதிகளை. கட்டிதூக்கி வண்டிகளில் ஏற்றி நாவலடி முகாமுக்கு அனுப்பி வைத்தனர். அகதிகள் கண்ணீரும் கம்பலையுமாக கட்டி பானைகளுடன் பலாத்காரமாக அரசின் 'கிழக்கு மீதான சதிதிட்டத்துக்கு' பலியாக்கப்-படுகிறார்கள். (இத்தனை கொடுமைகளும் தமிழ்நாட்டு அகதிகளுக்கு இந்தியரசுசெய்கிறது) அரசு சார்பு கருங்காலியான ஈ.பி.டி.பி இயக்கம் முகத்துவாரத்திலம், மாணிக்கப்-பிள்ளையார் கோயில் முகாமிலம் மேற்பார்வை செய்துவருகிறார்கள். மக்களின் நடமாட்டம் கடுமையாக உளவு பார்க்கப்படுகிறது. இளைஞர்களும் யுவதிகளும் காலநேரம்இன்றி காரணம் இன்றி பிடித்து செல்லப்படுகிறார்கள்,

www.tamilarangam.net

பிடித்து செல்லப்படுபவர்கள் திரும்பிவருவது மிகக்குறைவு, பத்திரிகையாளர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை, மாணவ மாணவியர்களின் கல்விக்கு உத்தரவாதம் இல்லை, உணவுக்கும் உடைக்கும், மருத்துவத்துக்கும் சுகாதார வசதிக்கும் படும் திண்டாட்டம் சொல்லி தீராது. எத்தனை கொடுமை எத்தனை கொடுமை..இங்கே......

"கிழக்கில் அரசின், அரசு சார்பு இயக்கங்களின் கண்மூடித்தனமான கைதுகள் தொடர்கின்றன, கூட்டிச் செல்லப்படுபவர்கள் வீடு திரும்புவதில்லை, நாங்கள் விதைத்த வயல்களில் விதைக்க முடிவதில்லை, நாங்கள் விதைக்க படையினர் அறுத்துக் கொண்டு போகிறார்கள் நிலங்களை விதைக்க விடாமல் பறித்திருக்கிறார்கள் நிலமும் இல்லாமல் தொழிலும் இல்லாமல் அங்கேபோய் என்ன செய்வது? கிழக்கின் அகதி குமுறுவது இது.

விவேகானந்தசபை முகாமை மையபோது மட்டகளி முகாமுக்கு மாற்றுவதாக கூறிவிட்டு அதிகாரிகள் மட்டகளப்புக்கு கொண்டு சென்றனர். அகதிகளை கூட்டிச் சென்ற இராணுவத்துடன் ஈ.பி.ஆர்.எல்.எப் ஆயுதபாணிகளும் கூடவேஇருந்தனர். இங்கு ஒரு குடும்பத்துக்கு 168/ பெறுமதியான பொருட்களை நிவாரண திணைக்களம் வழங்கியுள்ளது, இதுவயிற்றின் எந்த மூலைக்கு போகும் இங்குள்ள வாழ்க்கையின் கொடூரம் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா? "இவை எல்லாவற்றையும் விட உயிருக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லை, அதுதான் "பிரதானம் ஆனால் இங்கு உயிருக்கு உத்தரவாதம் இல்லை." 1983 இல் மலையகத்திலிருந்து வடக்குக்கு சென்று மீண்டும் அகதியாக முகாமில் இருக்கும் மலையக பெண் "எங்களுக்கு அங்கு போயும் வாழ முடியவில்லை இங்கு அகதிமுகாமிலும் தொடர்ந்து இருக்க முடியாது எங்கு போய் வாழமுடியும் என்றும் புரியவில்லை"!" என திகைக்கிறார். வடக்கை விட்டு விடுதலைப்புலிகளால் விரட்டப்பட்டு காக்கைத் தீவு முகாமிலிருக்கும் தமிழீழ முஸ்லீம்களில் ஒருவர் உறுதியாக சொல்கிறார் "எங்களது முகாமை அரசு மூடுவதில் நியாயமில்லை நாம் திரும்பி போகமுடியாது. வற்புறுத்தினால் எல்லா அகதிகளுக்காகவும் உண்ணாவிரதம் இருப்போம் வேண்டுமானால் எங்களையல்ல எங்கள் பிணங்களை இடம்பெயர்க்கட்டும் அரசு"

இதுதான் இலங்கையிலுள்ள அகதிகளின் உண்மை நிலவரம்.

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தின் மேல் சிறீலங்கா இராணுவம் ஒரு பெரிய இராணுவ நடவடிக்கைக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டுள்ளது. மறுபக்கம் 'அரசியல் தீர்வு'!'பேச்சுவார்த்தை' என எல்லோரையும் ஏமாற்றுகிறது. அரசுபடைகளுக்கும் -புலிகளுக்கும் இடையில் மோதல் எங்கு எந்த நேரத்தில் நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது. இன்றிருப்பார் நாளையில்லை என்ற நிலை வடக்கு கிழக்கு பூராகவும் நிலவுகிறது.

---

இந்தியாவிலுள்ள தமிழீழ மக்களின் நிலை

******************************1983 ஆடிப்படுகொலையை தொடர்ந்து சிறீலங்காவில் அகதிகளாக்கப்பட்ட 1,20 000 தமிழர்களில் 40 000 மக்கள் வடக்கு கிழக்கை நோக்கி வந்தனர். 80 000 பேர் அகதிகளாக தமிழ்நாட்டை சென்றடைந்தனர். அன்று தொடங்கி பத்தாண்டுகளில் ஆயிரக்கணக்கானமக்கள் சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தமிழ்நாட்டிலும், ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் தஞ்சம் அடைந்தனர். இன்று தமிழ் நாட்டு முகாம்களில்மட்டும் 92இல் நிர்ப்பந்தப்படுத்தி திருப்பியனுப்பிய 29000 அகதிகள் போக 80000மக்கள் முகாம்களில் உள்ளனர்.

www.tamilarangam.net

## தமிழ் நாட்டு அகதி முகாம்களில் உள்ள தமிழீழ அகதிகளைக்காட்டும் புள்ளிவிபரம்

| மாவட்டம் | முகாம்களின் தொகை | மக்கள் தொகை | மொத்தக் குடும்பங்கள் |
|---|---|---|---|
| இராமநாதபுரம் | 05 | 6435 | 1651 |
| வடஆற்காடு | 09 | 4852 | 1236 |
| தென்னாற்காடு | 06 | 3170 | 779 |
| சம்புவராயர் | 12 | 4286 | 1113 |
| செங்கை எம்.ஜி.ஆர். | 09 | 4296 | 1069 |
| சிதம்பரனார் | 03 | 2018 | 486 |
| காமராசர் | 07 | 4463 | 1105 |
| கன்னியாகுமரி | 05 | 1667 | 422 |
| நெல்லைகட்டபொம்மன் | 07 | 3686 | 939 |
| சேலம் | 12 | 4738 | 1307 |
| தர்மபுரி | 13 | 4778 | 1215 |
| பெரியார் | 07 | 5025 | 1285 |
| கோவை | 15 | 3842 | 979 |
| திண்டுக்கல் | 08 | 4653 | 1169 |
| பசும்பொன் தேவர் | 07 | 4367 | 1125 |
| மதுரை | 04 | 7010 | 1797 |
| புதுகை | 03 | 4373 | 1175 |
| திருச்சி | 05 | 6526 | 1700 |

முகாம்களுக்கு வெளியே 100000ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உள்ளனர்.

---

தமிழ் நாட்டிலுள்ள அகதிகளை வற்புறுத்தி 'சுயவிருப்பத்தின் பேரில் நாடுகடத்தும்' இந்திய ஆட்சியாளர்களின் கொடூர முகத்தை இனம், மொழி, சாதி, மதம், நாடு இவற்றை தாண்டி மனித நேயம்மிக்க சனநாயக உணர்வுள்ள ஒவ்வொருவரும் உலக நாடுகளிலுள்ள அகதிகளும் கண்டுகொள்ளவேண்டும். விசேடமாக தமிழ் நாட்டு மக்கள் சரியாக புரிந்து கொள்ளும்படி தங்களின் சகோதரர்கள் நாடு கடத்தப்படுவதை எதிர்த்து' கிளர்ந்தெழுந்து போராடும்படி கோரவேண்டும்.

இந்திய மத்திய மாநில ஆட்சியாளர்கள் தமிழீழ அகதிகள் மேல் கொடுக்கும் அழுத்தங்கள்

---

* தமிழ்நாட்டிலோ இந்தியாவின் வேறுபகுதிகளிலோ வாழும் (இலங்கைத் தமிழர்களுக்கு) தமிழீழ மக்களுக்கு 'அகதி' என்ற அந்தஸ்தோ அல்லது வேறு சட்டரீதியான அந்தஸ்தோ இந்திய மத்திய மாநில அரசால் வழங்கப்படவில்லை
(தமிழீழ மக்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகள் அடக்குமுறைகள் குறித்து சர்வதேசிய அகதிகள் உரிமை பற்றிய சாசனத்தை இந்திய அரசு மீறுவது பற்றி தாங்கள் 'அகதி' என்ற அந்தஸ்தே இன்றி இருக்கவைக்கப்பட்டுள்ளனர்.)
* தமிழ் நாட்டிலுள்ள தமிழீழ மக்கள் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையரின் உதவியையோ வேறு சர்வதேச அமைப்புகளின் உதவியையோ இந்திய அரசின் அனுமதியின்றி பெற முடியாது (இதனால்தான் நாடு கடத்தப்படும் அகதிகளில் இந்திய அரசு அனுமதிக்கும் மக்களை மட்டுமே யு.என்.எச்.சி.ஆர் 'பதப்படுத்தப்பட்ட அகதிகளை' மட்டும் பார்த்து திருப்திப்பட்டுக் கொள்கிறது)

www.tamilarangam.net

** அகதிகளுக்கு கொடுக்கப்படும் பண உதவி, பொருளுதவி அவர்களது குறைந்தபட்ச உயிர்வாழ்வுத்தேவைக்கே போதாது இருக்கும்படி அதிகாரிகளால் செய்யப்படுகிறது.

** அகதிகள் வெளியில் சென்று உழைப்பில் ஈடுபட்டுவந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது முகாமுக்கு வெளியில் இருக்கும் நேர அளவு நிர்ணயிக்கப்படுகிறது இதனால் தூர இடங்களுக்கு சென்று வேலைசெய்யமுடியாதுள்ளது, இரவு நேரவேலைக்கும் வழியில்லாமல் போய்விட்டது.

** அகதிகள் நடமாட்டத்துக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறது, வெளியில் செல்வதற்கான அனுமதி பெற அதிகாரிகளுக்கும் பொலிசாருக்கும் இலஞ்சம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

** எதுவித விசாரணை, முன்னறிவித்தல் உறுதிப்படுத்தல்கள் இன்றி தீவிரவாதிகள் பொலிசு நிலையத்தில் அடைப்பதும், சிறப்பு முகாம்களுக்கு மாற்றிக்கொள்வதும் கேட்டுக் கேள்வியின்றி நடக்கிறது.

** மிக அடிப்படையான மருத்துவ வசதிகள் உதவிகள் கொடுக்கப்படுவதில்லை முகாமுக்கு அனுமதிக்கப்படும் கொஞ்ச நஞ்ச பொருள்களும் 'இடையில் பறிக்கும் பிசாசுகளின்' கைகளில் போய்விடுகிறது.

** அகதிகளின் குடிசைகள் பழுதுபார்த்து கொடுக்கப்படுவதில்லை, இயற்கை சூழலுக்கு ஒவ்வாத முறையில் அமைக்கப்பட்டுள்ளது. தீக்கிரையான ஆத்தூர் முகாமை திருத்திகொடுக்க அதிகாரிகள் மறுக்கிறார்கள். முகாம்களில் மல, சல கூடவசதி இல்லை இதனால் நோய்த்தொற்று கடுமையாகவுள்ளது.

** அகதி மாணவ மாணவியருக்கு கல்வி வசதி திட்டமிட்டு தடுக்கப்பட்டுள்ளது.

[redacted] ,

** கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் செய்த அனைத்து வேலைகளும் நிறுத்தப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

** உள்ளூர் பொலிசார், முகாம் பொலிசார், உளவுப் பிரிவினர் இவர்களின் கையூட்டு தொந்தரவுக்கு எல்லையில்லை. மறுத்தால் புலிகளுடன் தொடர்புபடுத்தி விடுவர் சிறப்பு முகாம் அனுப்பிவிடுவர். சில இடங்களில் பொலிசு நிலைய வளாகம் சுத்திகரிக்க கட்டாயப்படுத்தி அகதிகள் கூட்டிச் செல்லப்படுகிறார்கள். பாலியல் பலாத்காரத்துக்கான நிர்ப்பந்தங்கள் இளம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்படுத்தப்படுகிறது.

** இலங்கையின் உண்மைநிலவரத்தை அறியவிடாது தடுக்கப்படுகிறோம். அதற்கு தேவையான பத்திரிகைகள், சஞ்சிகைகள் பெறுகின்ற படிக்கின்ற உரிமை இல்லை. ஏன் மற்றைய முகாம்களில் என்ன நடக்கின்றது என்பது கூட தெரிந்துகொள்ள முடியவில்லை.

** பெரிய புலியூர், சொக்கரம்மன்நகர், தாப்பாத்தி, காளீஸ்வர் நகர், பரமத்தி பூவைப்பட்டி, அவிநாசி ஆறியார் நகர், குறிஞ்சிப்பாடி முகாம்களில் தமிழ்நாடு மறுவாழ்விப்பு ?அதிகாரிகள் நேரடியாக அகதிகளை திரும்பிச்செல்ல சம்மதிக்குமாறு வற்புறுத்தப்படுகிறார்கள்.

** புரட்டாதி 9 ம்திகதிக்கு முன் பணஉதவி பொருளுதவி நிறுத்தப்படும், முகாம்கள் மூடப்படும் எனவும் நாடு திரும்ப சம்மதிக்காதவர்கள் சிறப்பு முகாமுக்கு மாற்றப்படுவார்கள் எனக்கூறி நேரடியாக பயமுறுத்தப்படுகிறார்கள்.

www.tamilarangam.net

தமிழ்நாட்டிலுள்ள 133 அகதி முகாம்களில் 15000 மேற்பட்ட விவசாய கூலிகள் இருக்கின்றனர். இவர்கள் பல்வேறு விதமான உடலுழைப்பு வேலைகளில் ஈடுபட்டு வந்தவர்கள். சாலைபோடும், புகையிரத பாதை போடும் பணி பார்க்கும் ஒப்பந்தக் காரர்களிடம் வேலை செய்து வந்தவர்கள் இவர்கள் வேலைக்கு செல்ல முடியாது இருப்பதுடன், தங்களின் பழைய உழைப்புக்கான ஊதியத்தையும் பெறமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள், இவர்கள்தான் முகாம் வாழ்க்கையில் மிகவும் கடைநிலை வாழ்க்கையிலிருந்து வயிற்றுப்பாட்டுக்கே விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

அகதிவாழ்க்கை கூட வாழமுடியாத மேலேபார்த்த நிர்ப்பந்தங்கள் காரணமாக "இங்கிருப்பதைவிட ஊரில் போய் சாகலாம்" "விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து போராடிச்சாகலாம்" "வேறு வழியில்லை போவம்" "தினம் தினம் சாவதைவிட ஒரு நாளில் சாவது நல்லது" இப்படி உணர்ச்சி வசப்பட்ட நிர்ப்பந்த முடிவுகளுக்கு தள்ளப்பட்டு 7000 பேர் 'சுயவிருப்பத்துடன் நாடுகடத்தும் இந்திய ஆட்சியாளர்களின் சதி திட்டத்துக்கு பலியெடுக்கப்பட்டுள்ளார்கள். 2800பேர் திருகோணமலையில் கொண்டுவந்து இறக்கப்பட்டுள்ளனர். இங்குள்ள அகதிகளை பராமரிக்க திண்டாடும். தனது இராணுவ நடவடிக்கைகள் மூலம் புதிய அகதிகளை உருவாக்கி வரும் சிறீலங்கா அரசு தமிழ் நாட்டில் இருந்து வரும்அகதிகளுக்கு எந்தவகை நிவாரணங்களையும், தீர்வையும் கொடுக்கப்போவதில்லை என்பதுமட்டும் திண்ணம்.

இப்படியாக ஒரு பயங்கரமான சூழ்நிலைமையில் நாளைய புலரும்பொழுது பற்றிய நூறுகேள்விகளை சுமந்த வண்ணம், எதிர்காலம் குறித்த நம்பிக்கையும் அற்று வாழும் தமிழீழ அகதிகள் ஜெ. ராவ் கும்பலின் நாடுகடத்தும் சதி திட்டத்தால் ஒடுக்குமுறையின் உச்சத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த ஜனநாயக விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகளை இந்திய ஆட்சியாளர்களுக்கு பல்லவி பாடிவரும் தமிழ் துரோகத்தலைமைகள் ஒன்றும் கூட அகதிகளுக்காக குரல் கொடுக்க முன்வரவில்லை, அகதிகளுக்கு ஆதரவு தெரிவித்து அவர்களின் 'அறிக்கை' கூட இல்லை. காரணம் இத்தலைமைகளுக்கு நல்ல பாதுகாப்பான இடம், அறுசுவை உணவு, மதுபானம் எல்லாம் கொடுத்து இந்திய அரசு பாதுகாத்து வருகிறது.

தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம்களில் இயங்கிவரும் "ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம்" (ஒபர்) 'தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன் தலைமையில் இயங்குகிறது. அகதிகள் பராமரிப்பு பெயரில் வெளிநாடுகளிடமிருந்து கோடிக்கணக்கான பணங்களை வாங்கி அகதிகளுக்கு பாதி தமக்கு பாதி வாயில் போட்டுக் கொண்டிருப்பது ஊரறிந்த இரகசியம். இவர்கள் அகதிகளுக்கு இழைக்கப்படும் நிர்ப்பந்தங்கள் கொடுமைகள், பற்றி அறிந்துகொண்டவர்கள். இந்திய அரசின் நிர்ப்பந்-தங்களை சுட்டி காட்டி "அகதிகள் நாடுகடத்தப்படுவதை" சாத் வீக அணுகுமுறையில் தெரிவிக்கிறார்கள். அவர்களது ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல் "ஈழசுதந்திரன்" பத்திரிகையில் நாசுக்காக நயம்பட அகதிகளுக்கும் நோகாமல். ஜெ-ராவ் கும்பலுக்கும் நோகாமல் பூசி மெழுகிறார்கள். இப்பிரச்சனையை சர்வதேசளவில் எடுத்துச் சொல்ல இராஜதந்திரிகள் (தங்கள் போன்ற) தமிழீழ மக்கள் பக்கத்தில் பலயீனமாக இருப்பதாக வேதனைப்படுகிறார்கள். 12/08/93 அன்று சென்னையில் இலங்கை- இந்திய நட்புறவு கழகம் (ஈழ-தமிழக/இந்திய அல்ல) என்ற பதாகையின் கீழ் ஒரு உண்ணாவிரத எதிர்ப்பை தெரிவித்தார்கள். இதில் தமிழ்நாட்டு எதிர்கட்சிகளும் தமது கூட்டி அரசியல் பிரதிநிதிகளை பங்குபெறவைத்தது கவனிக்கதக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சனநாயகம், சமாதானம், சமயசார்பின்மை" என முழங்கும் '[redacted] 'ஈழ சுதந்திரன்' அதன் ஆசிரிய குறிப்பில் சிறீலங்கா அரசை நன்றாக சாடிவிட்டு இறுதியில் <u>வலுக்கட்டாயமாகவேனும் இந்தியா, ஐ.நா.சபை போன்றவை தலையிட்டு தமிழீழ மக்களுக்கு நல்வாழ்வும் பாதுகாப்பும், சமாதானமும் பெற்றுத்தரவேண்டும்.</u> என தங்களது உண்மையான உளக்கிடக்கையை, தமது அரசியலை தெளிவுரைத்திருக்கிறார்கள். 'ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகத்தின்' தலைவர் சந்திரகாசனின் அகதி சேவை, அகதிகள் மேலான இந்திய ஆட்சியாளர்களின் நிர்ப்பந்தங்களை நயம்பட முன்வைக்கும் முகமூடி பிரச்சாரத்தின் உள்நோக்கம்' (அகதிகளை அன்புகாத்தும் இந்திய அரசு இங்கு வந்து ஈழமக்களுக்கு என்னத்தை புடுங்கும் என்பது இவர்களுக்கு தெரியாதா? 87 இல் இங்கு வந்துசெய்த 'சமாதானம்' (அக்கிரமிப்பு) தமிழீழ மக்களுக்கு தெரியும்) தமிழீழ தேசிய சுதந்திரத்துக்கும் மக்களின் விடுதலைக்கும் எதிரான இந்திய சார்பு, அமெரிக்க ஏகாதிபத்திய சார்பு கைக்கூலித்தனத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். என்பது விபரம் அறிந்த அகதிகளுக்கு கூடதெரியும். இவர்களது அன்னிய தரகுத்தனத்தை சமரச அரசியலை, சொல்லும் ஈழ சுதந்திரத்தை அவர்கள் முன்னெடுக்கும் சேவைகள் உண்ணாவிரதங்கள் மூலம் அதிலுள்ள இரட்டை வேடத்தை மக்களுக்கு தோலுரித்து காட்ட வேண்டியிருக்கிறது. தமிழீழ -தமிழக மக்கள் தங்கள் நேரடி எதிரிகளை மட்டுமல்ல எதிரிகளின் விசுவாசமான நண்பர்களையும் (மக்களுக்கும்- எதிரிக்கும் இடையில் பாலம் போடும் பேர் வழிகள், அமைப்புக்களையும்) அமைப்புக்களையும் கண்டு கொள்ள அப்போ தான் வழிபிறக்கும்.

(குறிப்பு) இந்தியாவில் திரிபுரா மாநிலத்தில் இருக்கும் "சாக்மா" அகதிகளை திருப்பியனுப்ப இந்திய -வங்காள அரசுகள் திட்டம் தீட்டியுள்ளது. இந்திய அரசு கடந்த மாதம் அகதிகளுக்கு உணவை நிறுத்தியிருக்கிறது. "சாக்மா" அகதிகள் மத்தியிலுள்ள உயிரோட்டம் உள்ள இளைஞர்கள், மாணவர்கள் அகதிமுகாமுக்குள் பலத்த எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தியுள்ளனர்.

இவ்வாறாக தமிழீழ போராளிகளையும், அப்பாவி அகதிமக்களையும் ஜெ.ராவ் கும்பல்கள் அடக்கியொடுக்குகிறார்கள். தமிழ்த் துரோகத் தலைமைகள் மவுனம் சாதிக்கின்றன (மவுனம் சம்மதத்துக்கு அறிகுறிதானே) முதலில் போராளிகளை 'பயங்கரவாதிகளாக' காட்டி மக்களை ஆதரிப்பதாக கூறி முதலில் போராளிகளை தமிழ்நாட்டில் நசுக்கினர். இப்போ மக்கள் மத்தியில் 'பயங்கரவாதிகள்' இருப்பதாக கதைவிட்டு 'மக்களை நாடுகடத்தும்' சதி திட்டத்தை இந்திய ஆட்சியாளர்கள் நிறைவேற்றுகிறார்கள். இதற்கு ஆதிபாரம் துரோக கூட்டம் ஒன்றை கூட்டணியினர் முதல் துரோக ஆயுதக்குழுக்கள், சீர்திருத்தவாதிகள் சமரசவாதிகள் வரை தமிழர் மத்தியில் இருந்தே தயாரித்துவைத்திருக்கிறார்கள். இன்னும் இந்த, 'சாத்தான்கள் ஓதும் வேதம்' "இந்தியா மீண்டும் தலையிட வேண்டும்" என்பது தெளிவு.

தமிழீழ அகதிகளை நாடுகடத்தும் இந்தவிவகாரம் தமிழ்நாட்டை ஆளும் தமிழ்விரோத கூட்டத்தை, இந்திய மத்திய அரசை, தமிழ் துரோக கும்பல்களை தமிழீழ தமிழக மக்களுக்கு மீண்டும் அடையாளம் காட்டியிருக்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நேரடியான எதிரிகளைமக்களுக்கு இனம்காட்டுவதும் எதிரியை எதிர்த்து அணிதிரட்டுவதும் இலகுவானது. ஆனால் 'நண்பர்கள் போல் நடிக்கும்' மக்களின் எதிரிகளை மக்களுக்கு அடையாளம் காட்டுவது எல்லாக்காலங்களிலும் இலகுவாக இருக்காது. குறிப்பான காலங்களில் போலி நண்பர்கள் தவிர்க்க முடியாமல் தமது தேசவிரோத, மக்கள்விரோத, சனநாயகவிரோத செயல்கள் மூலம் தங்கள் உண்மைச் சொருபத்தை காட்டுவார்கள்.

www.tamilarangam.net

தேசபக்த மக்கள் அமைப்புக்கள் இக்காலங்களில் 'போலி நண்பர்களை' மக்களுக்கு அடையாளம் காட்டுவது மிகஇலகுவானது. இந்திய அரசின் கபட நோக்கங்களை போராட்டத்தின் ஆரம்பகாலங்களில் "வஞ்சம் தந்த பாடம்" என சில இயக்கங்கள் பிரச்சாரம் செய்தனர். அது மக்கள் மத்தியில் பரந்த தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் இந்திய ஆக்கிரமிப்பு யுத்தம் (87–90) மூன்று ஆண்டுகளில் இந்திய அரசுபற்றி அது பேசிய 'சமாதானம், நட்புக்கு' பின்னாலிருந்த கபடநோக்கங்களை குறித்து மக்களுக்கு ஒரு பெரிய பாடத்தை வழங்கியது. இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தம் புரிந்தவர்களும், எதிர்த்தவர்களும் பரந்துபட்ட மக்களுக்கு அவற்றின் அரசியல்–இராணுவ அறுத்தை தெளிவுபடுத்துவது மிக சுலபமாகவிருந்தது அறிவர்.

இன்று தமிழ்நாட்டை ஆண்டு அழித்து வரும் தமிழின விரோதிகள் இந்திய ஆட்சியாளர்கள் தமிழீழத்தில் அல்ல தமிழ் நாட்டில் அப்பாவி தமிழீழமக்கள் மேல் தொடுத்து இருக்கும் 'நாடு கடத்தும் துரோகத்தை' 1992 இல் முதலில் அம்பலப்படுத்தினோம். (படிக்கவும்→"அகதிகள் வெளியேற்றம் சுயவிருப்பமா? நிர்ப்பந்தமா?") தமிழின, தமிழீழ மக்கள் விரோதிகளின் போலி முகங்களை மீண்டும் மக்களுக்கு ஆழமாக புரியவைக்கும், மக்களை அணிதிரட்டும் வாய்ப்பு தமிழீழ, தமிழக தேசபக்த முற்போக்கு சனநாயக சக்திகளுக்கு கிடைத்திருக்கிறது.
மக்கள் தங்கள் மேல் எதிரிகள் தொடுக்கும் தாக்குதல்கள் மூலமும், நிர்ப்பந்தங்கள் வாயிலாக அவர்களை வேளா வேளையில் அடையாளம் காண்கிறார்கள். ஆனால் தேசத் தேசத்தின் சுதந்திரத்துக்காக, மக்களின் விடுதலைக்காக போராடும் அமைப்புக்கள் கடமை என்ன? மக்களின் தினசரி நடவடிக்கைகளுடே மக்கள் விரோதிகளின், போராட்ட எதிரிகளின் வேறுபட்ட முகங்களை, அவர்களது தேசவிரோத, மக்கள் விரோத செயல்களை தெளிவாக மக்கள் சமுத்திரத்துக்கு புரியவைப்பதும், ஒரு எதிரியின் கைகளில் இருந்து விடுபட்டு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எதிரிக்கும்பலிடம் அதே பழைய விலங்குகளை, காண்டலை மாற்றிக் கொள்வதிலிருந்து எல்லா வகையான மக்களின் விரோதிகளிடமும், எல்லாவகை ஒடுக்குமுறை காரணிகளுக்கு எதிராகவும் மக்கள் போராட விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும், போராட்டத்தை முன்னெடுத்து செல்ல வேண்டும். தமிழீழ முற்போக்கு தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளின் கடமையும் இதுவே

---

*இலங்கை, இந்திய , ஐரோப்பியஅமெரிக்க தளங்களிலுள்ள முற்போக்கு சக்திகளே!

**தமிழீழ அகதிகளை நாடுகடத்தும் ஜெ. ராவ் கும்பலை அம்பலப்படுத்துங்கள்.

**தமிழீழ அகதிகளின் துன்ப துயரங்களை உலகுக்கு வெளிப்படுத்துங்கள்.

**தமிழீழ அகதிகளுக்கு 'அகதி அந்தஸ்து' அளிக்காத இந்திய சமாதான தூதர்களின் சர்வதேச சேவலத்தை, முகமூடியை புட்டுகாட்டுங்கள்.

**தமிழீழ அகதிகள் வாழும் நாடுகளில் (முறையான 'அகதி அந்தஸ்தும்' அடிப்படை நிவாரணங்களும் தேவை என்பதை அம்மக்களுக்கு தெளிவுபடுத்துங்கள்.

** சர்வதேசளவில் அகதிகளாக்கப்பட்டிருக்கும் தமிழீழ மக்களுக்கு நிரந்தர தீர்வு <u>சுதந்திரமான அமைதியான தேசம், அது தமிழீழ சுதந்திர தாயகம்- புரட்சிகரமான தமிழீழ மக்கள் சனநாயக குடியரசு.</u>

(குறிப்பு) அமெரிக்கா தலைமையில் பாலஸ்தீன இயக்கமும்–இசுரேல் அரசும் செய்த பாலஸ்தீன மக்களை ஏமாற்றும் ஒப்பந்தத்தை எதிர்த்து ஜோர்டான் நாட்டிலுள்ள "வக்காமில் பாலஸ்தீன அகதிமுகாமில்" 15000 பாலஸ்தீன அகதிமக்கள் ஒப்பந்தத்தை நிராகரித்து கிளர்ச்சி நடத்தியிருக்கிறார்கள்.

∴தமிழீழ அகதிகள் எந்தநாட்டு முகாமில்? எப்போது? எதற்காக? எது செய்வர்?

www.tamilarangam.net

உலகில் அகதிகள் பிரச்சனை என்பது சர்வதேசமயமாகிவிட்டது. உலக மக்கள் அனைவரையும் தமது கைகளுள் கட்டிபோட்டு சுரண்டிக்கொழுக்கவும், ஆதிக்க அதிகாரம் செய்யவும் சர்வவல்லமைபடைத்த அமெரிக்கா தலைமையிலான ஏகாதி-பத்தியங்கள் ஒருபுறமும், உள்நாட்டு பிற்போக்கு இனவெறி, மதவெறி, இராணுவ-அதிகாரவெறி பாசிச அரசுகள் மக்கள் மீது நடத்தும் காட்டுமிராண்டித்தன மனிதப்-படுகொலைகள் மறுபுறமும் உலக மக்களை குலுக்குகிறது. இந்த உள்நாட்டு, வெளிநாட்டு யுத்த வெறியர்களின் படுகொலைக்கரங்களில் இருந்து தப்பிபிழைக்க, தப்பிபிழைக்கும் மக்கள் தங்கள், தங்களின் சந்ததியின் உயிரையாவது இந்த உலகத்தில் காப்பாற்றும் எண்ணத்தில் வாய்ப்பான வழிகளில் உலகின் எந்த மூலைக்கும் ஓடுகிறார்கள்...... இந்த எதுமறியா அப்பாவி மக்களை தங்களது அரசியல் ஆதிக்க நோக்கத்துக்காக சில அரசுகள் "அகதிகளாக கூட" அங்கீகரித்து நிவாரணம் அளிக்க மறுக்கின்றன. <u>உ-ம் தமிழீழ அகதிகளை இந்திய அரசு அங்கீகரிக்கவில்லை</u> அகதிகளுக்கான அய்நா ஆணையகம் கூட இந்தக் கொடுமையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன் சர்வதேச அகதிகள் பட்டியல் படம்பிடித்து காட்டுகிறது. கீழே அந்த பட்டியல்

| அகதிகளின் தாயகம் | அரவணைக்கும் நாடுகள் | அகதிகளின் தொகை |
|---|---|---|
| *ஆப்கானிஸ்தான் | பாகிஸ்தான் | 32 75 000 |
| *ஆப்கானிஸ்தான் | | |
| ஈராக் | இரான் | 28 50 000 |
| * எல்சல்வடோர் | அமெரிக்கா | |
| குவாதிமாலா | கனடா | 14 47 200 |
| * வியட்னாம் | மெக்ஸிகோ | 3 56 400 |
| * துருக்கி | | |
| ஆப்ரிக்கா | | |
| ஹொங்காங் | | |
| வியட்னாம் | | |
| இலங்கை | அய்ரோப்பியநாடுகள் | 8 94 000 |
| *மொஸாம்பிக் | மலாவி | 8 22 500 |
| *எதியோப்பியா | | |
| சாட் சயர் உகண்டா | சூடான் | 7 67 700 |
| * சூடான் | | |
| சோமாலியா | எதியோப்பியா | 7 10 200 |
| * எதியோப்பியா | சோமாலியா | 6 00 000 |
| * வியட்னாம் | சீனா | 2 80 500 |
| *நிகராகுவா | | |
| எல்சல்வடோர் | | |
| கியூபா | கோஸ்டாரிகா | 2 78 600 |
| *ருவாண்டா | | |
| சயர் | | |
| உகண்டா | | |
| வியட்னாம் | | |
| | புருனே | 2 67 500 |
| *வியட்னாம் | நியூசிலாந்து | |
| | ஆஸ்திரேலியா | 1 02 600 |
| *கம்பூச்சியா, லாவோஸ் | | |
| மியான்மார் | தாய்லாந்து | 99 000 |

பாலஸ்தீன அகதிகள், ஸ்லோவேனியர், றெர்சேகோவினர், குரோசியா, பொஸ்னியா,

[illegible]

www.tamilarangam.net

*******************************

எங்கள் குழந்தைகளுக்கு என்ன நடந்தது?
எங்கள் குழந்தைகளுக்கு என்ன நடந்தது?
எங்கள் குழந்தைகளுக்கு என்ன நடந்தது?

*******************************

நிலவு கிழிந்து தூங்குகிறது
வெளியில்
நள் யாமம்.
உதிர்ந்துகொண்டிருக்கும் இலைகளின்மேல்
நடந்து திரிகின்றனர்
உயிர் திருடும் எமதூதர்.

அடிவளவின் கிணற்றுக்குள்
காலம்காலமாக புதையுண்டு கிடந்த
பூதங்களும்
இப்போது சிலிர்த்துக் கொண்டு
கிளம்புகின்றன.

துயிலில் தொலையாது
துயரில் கரையும் இன்றைய இரவில்
இதயத்தைப் பிடுங்கி
மேசை மீது வைத்துவிடுகிறேன்
குருதி சொட்டச் சொட்ட
பெருகும் அதன் ஒலிக் குமுறலில்
கொஞ்ச நேரம் நடுங்குகிறது மேசை....

வெளியுலகின் காற்று வாங்கிக்
குளிர்ந்து போய்விடுகிறது இதயம்

அப்போது
விட்ட இடத்தில் இருந்து என்னுடைய
கவிதையைத் தொடங்குகிறேன்

இன்றையைப்போல
என்றைக்கும் ஒரு கவிதைக்காக
நான் உழன்றது கிடையாது
வெளியில்
நெடு நாளாய் அலைந்தது இக்கவிதை
அதனுடைய ஆரம்பமே
ஒரு கேள்விதான்.

சொல்லப்பட்ட நண்பர்களைப் பற்றி
காணாமல் போன நண்பர்களைப் பற்றி
ஒரு பெரிய கேள்வி அது.

கேள்வியில் பிறப்பெடுத்த
இந்தக் கவிதை
திடீரென்று என்னைவிட்டு பிரிந்து செல்கிறது
நெய்யப்படாத வார்த்தைகளுடன்
அறிவால் நெறிப்படுத்தப்படாத
மிகையுணர்ச்சியும் சேர்ந்து
பிரவாகம் எடுக்க
இந்தக் கவிதை பிரிந்து செல்கிறது...

பௌர்ணமி நிலவிலும்
ஒளி தேயாமல் கிடக்கிற (இருளில்)
அந்த மாடி வீட்டைச் சுற்றிச் சுற்றிவருகிறது
இரகசியப் பூட்டப்பட்டிருக்கும்
அதனுடைய பழங்கால கதவின் மீது
மூர்க்கமாக மோதுகிறது
இரகசிய யன்னல்களுக்கு அருகே சென்று
உன்னிப்பாக கேட்கிறது.....

வெளிச் சுவரில் தெறித்திருக்கும்
குருதிச் சுவட்டருகில் நின்று உருகுகிறது...
வீட்டின் வெளிப்புறம்
ஓங்கிய மரங்களில்
இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கும்
அவலக் குரல்களில் தேடுகிறது
இரவுகளில்
கடற்கரையில் காலடிச்சுவடுகளைப்
பின் தொடர்ந்து செல்கிறது
தாழம் புதர்களுள் ஒளிந்திருந்து
குருதியில் நனைகிறது....

அலைகளுக்கு மேல் அலைகிறது
அவை புரட்டி விடும் உடல்களைத்
திருப்பித் திருப்பித் தேடுகிறது
கண்களில்லா உடல்களுக்குக்
கண்களையும்
முகம் சிதைந்த உடல்களுக்கு
முகங்களையும் தேடிச் சினக்கிறது....

(தொடர்ச்சி உள்பக்கம்)

www.tamilarangam.net

கவிதை தொடர்ச்சி--- --

தெருவில் வீசப்பட்டுள்ள
ஒற்றைச் செருப்பின் மீது
வீட்டுப்படிகளில் வீசியெறியப்பட்ட
மூக்குக் கண்ணாடி மீது
தெருமுனையில் புரட்டி விடப்பட்ட
மோட்டார் சைக்கிள் மீது
தயங்கித் தயங்கி நிற்கிறது

தகப்பன் தொலைந்த பிறகு
பிறந்த குழந்தைகளின்
பளிங்கு போன்ற விழிகளில்
எதிரொலிப்பது என்ன என்று தெரியாமல்
குழம்புகிறது....
தாய்மாரின் கண்ணீர்த் துளிகளை
ஏந்திக்கொண்டு செல்கையில்
தலை குப்புற வீழ்கிறது

தேக்கு மரங்களின் கீழ்.
புற்குழிகளின் மேல்.
முகாம்களின் கோடிப்புறங்களில்.
மேசை மீது இப்போதும்
அப்போது போலவே கிடக்கும்
மூடப்படாத பேனையருகில்.
முற்றுப் பெறாத கடித வரிகளில்

சுவரில் தொங்கும் படங்களில்
அறையில் சிந்தியிருக்கும் ஆடைகளில்
பூவாத பூவரசுகளில்
ஈரப்பனையில்
ஓரக் கூந்தலின் ஒற்றை மலரில்

நின்று பம்பரம் போலச் சுழல்கிறது..

காற்றிலும் வெளியிலும்
மூடப்பட்ட எல்லி இரும்புக் கதவுகளிலும்
புகை கசியும் எல்லா துப்பாக்கிகளிலும்
அறைந்து கேட்கிறது

எங்கள் குழந்தைகளுக்கு என்ன நடந்தது??

ஆக்கம் ---சேரன்

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

விமலதாசன் நினைவு

1983 ஜூலை இன அழிப்பு தென்னிலங்கையிலும் சிறைச்சாலைகளிலும் நூற்றுக்கணக்கான தமிழர்களை பலி கொண்ட அதே வேளை யாழ்ப்பாணத்திலும் பலிகொண்டது அவர்களில் தேசிய விடுதலைப்போராளியும், மனிதன் பத்திரிகையின் ஆசிரியருமான விமலதாசன் முக்கியமானவொருவர்.

பண்டதரிப்பை பிறப்பிடமாகக் கொண்டவர் யாழ்ப்பல்கலைக்கழக விஞ்ஞான பீடபட்டதாரியும் ஆவார். 83 ஜூலை இனஅழிப்பு நாளன்று பஸ் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த போது சிறீலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1977ல் விமலதாசன் மனிதன் பத்திரிகையின் ஆசிரியரானதோடு அதன் அமைப்பாளராகவும் பொறுப்பேற்றார். இதன்பின் மனிதன் அமைப்பால் கிராமிய ஆய்வு, கல்விசேவை, உள்ளூர் உற்பத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன பின்தங்கிய தமிழ் மாவட்டங்களில் மன்னார் வவுனியா போன்ற இடங்களில் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு இலவச கல்விக்கருத்தரங்கும் நடத்தப்பட்டது.

இலங்கை என்பது தமிழீழம், சிறீலங்கா என்ற இரு தேசங்களைக் கொண்டது என்பதை கொள்கை ரீதியாக நிறுவும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். இம்முயற்சியின் போது திரிபுவாத இடதுசாரிகளோடும், தென்னிலங்கை முற்போக்கு சக்திகளோடும் கடுமையாக மோதினார். 1979இல் இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் தோன்றிய போது அதன் முக்கிய உறுப்பினராக சேர்ந்து தென்னிலங்கை சக்திகளுக்கு தமிழ் மக்களுக்குள்ள சுய நிர்ணய உரிமையை தெளிவுபடுத்தினார்.

ஒரு பழைய சைக்கிளில் தோளில் துணிப்பையுடன் மெலிந்த தோற்றத்தோடு குடாநாட்டு வீதிகளில் வலம் வரும் விமலதாசன் மறைந்து பத்து வருடமாகிறது. தமிழ்த்தேசம் இருக்கும் வரை அவனை தேச மக்களால் எளிதில் மறந்து விடமுடியாது.

ஆக்கம் ---பரந்தாமன்

நன்றி ---கரிகர்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

www.tamilarangam.net

****************************************

1983 யூலை தமிழினப்படுகொலையும்

1993 யூலைவரை தொடரும் தமிழின ஒடுக்குமுறையுத்தமும்.

****************************************

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப்போராட்ட வரலாற்றில் 1983 யூலை தமிழினப்படுகொலை' ஒரு "கறுப்பு யூலை" என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது அந்த ஆண்டு அந்த மாதம் நாடு தழுவிய அளவில் சிங்கள இனவாதம் தலைவிரித்தாடியது. தனது கொடூரமான இனவாத கொள்கை, இனவாத செயல்களை உள்நாட்டு மக்களுக்கும் உலகுக்கும் படம் பிடித்து காட்டியது. ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிரை காவு-கொண்டது(2500 பேர்வரைஇது அரசு கணிப்பு) பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை சொந்த மண்ணில் அகதிகளாக்கியது. இலட்சக்கணக்கான சொத்துக்கள் கொள்ளையிடப்-பட்டது, கோடிக்கணக்கில் தீ வைத்துக்கொழுத்தி நாசமிட்டது, சிங்கள இனவாதமும் பௌத்த மத வெறியும் இரண்டறக் கலந்து நிற்கும் சிறீலங்கா அரசும் ஆளும் கட்சிகளும் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு நடத்தி வந்த இன ஒடுக்கு முறை ,இனப்படுகொலைகளின் (1958,81,77) உச்சக்கட்டம் சிகரம் தான்"1983 யூலை இனப்படுகொலை" (இது இனக்கலவரமல்ல)

தமிழீழ மக்கள் தமது தேசிய சுயநிர்ணய உரிமை, தேசிய தனித்துவம் தேசிய அரசு பற்றியஉணர்வுகளுக்கு அரசியல் கோரிக்கைகளுக்கு அதற்கான போராட்ட மார்க்கம் குறித்த கேள்விகளுக்கு தீர்க்கமான ஒரு முடிவை பரந்துபட்ட மக்கள் எடுக்க வற்புறுத்தியது, வடக்கு கிழக்கு இணைந்த தமிழர்களின் 'தமிழீழ தாயகம்' வேண்டும் என்பதை அனைத்து தமிழர்களுக்கும் உணர்த்தியது.

உலகின் ஒவ்வொரு மூலையிலும் தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் விசேடமாக ஆறு கோடி தமிழர்கள் வாழ்கின்ற தமிழ் நாடு உட்பட எல்லா இடங்களிலும் தமிழ் மக்கள் மீதான சிறீலங்கா அரசின் இனப்படுகொலை கண்டிக்கப்பட்டது, : தமிழீழ மக்களின் மீதான படுகொலைக்கு எதிர் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும், ஆதரவுக் கிளர்ச்சிகளும் தமிழீழ தேசிய சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தை ஆதரித்த கோசங்கள் விண்ணைப்பிளந்தது மண்ணை உலுக்கியது. அனைத்துலக மக்களின் கவனத்தை ஈர்த்தது. தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டம் பற்றி வாயாரப்பேசப்பட்டு ஆதரிக்கப்பட்டது, தொடர்ச்சியாக சிறீலங்கா அரசின் தேசிய இன ஒடுக்குமுறை யுத்தம் கண்டிக்கப்பட்டு எதிர்க்கப்பட்டு வந்தது.

இன்று 1983 இலிருந்து பத்தாண்டுகள் உருண்டோடிவிட்டது. 1993 வந்து நிற்கிறது. கடந்த ஒவ்வொரு ஆண்டும் போராட்டத்தின் போக்கில் பெரும் திருப்பங்களுடன் மாறி மாறி நடைபோட்டு வந்திருக்கின்றது,' தமிழீழ மக்களின் தேசிய விடுதலை யுத்தம் ஒரு தசாப்த காலத்தை தாண்டி தொடர்கிறது,

1983 யூலை இனப்படுகொலை, ஆயுதப்போராட்ட இயக்கங்களை நோக்கி இளைஞர்கள் யுவதிகள் அணிதிரள்தல். தமிழீழ மக்கள் அகதிகளாக்கப்படுதல்.

1984 ஆயுதப்போராட்ட இயக்கங்களின் அசுர வளர்ச்சி, இந்திய விரிவாதிக்க அரசின் தீய நோக்கம் கொண்ட உதவிகள், தமிழீழ -தமிழக மக்களின் எழுச்சி உச்சம்.

1985 போராளி இயக்கங்களின் அரசு படைகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை-கள் உக்கிரம், இந்திய அரசு முன்னிலையில் சிறீலங்கா அரசு -தமிழீழபோராளி இயக்கங்கள் பேச்சு வார்த்தை, (திம்பு பேச்சுவார்த்தை)பேச்சுவார்த்தை தோல்வி, இயக்க தலைவர்கள் சிலரை இந்திய அரசு நாடுகடத்தியது, போராளி கள் மேல் மிகுவான நெருக்கடிகளை கொடுத்தது. சிறீலங்கா அரசுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் வேகமடைதல்.

www.tamilarangam.net

1985 விடுதலை இயக்கங்களுக்குள் உட்கட்சி பூசல்கள் அதிகரிப்பு, இயக்க ஆதிக்கப் போட்டிகள் தொடங்கின.

1986 'தமிழீழ விடுதலை இயக்கத்தை' விடுதலைப்புலிகள் அழித்தொழித்ததும், உட்கட்சி பூசல்கள் முற்றிய இயக்கங்கள் சிதறத் தொடங்கியது, விடுதலைப்புலிகள் சக இயக்கங்களின் செயற்பாட்டுக்கு தடை விதித்தது.

1987 யூலை 29 இந்திய -இலங்கை ஒப்பந்தம் (தமிழீழ மக்களுக்கு எதிரான துரோகம்) இந்திய ஆக்கிரமிப்பு படைகளுக்கும்- விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தம்

1988 தற்காலிக வடக்கு கிழக்கு இணைந்த மகாணசபை தேர்தலும் துரோக இயக்கங்களின் பங்களிப்பும், இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான தமிழீழ மக்களின் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தம் வளர்ச்சியடைதல்.

1989 இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தம் சிறீலங்காவில் ஜே.வி.பி தலைமையில் வளர்தல்; தமிழீழ துரோக இயக்கங்கள் ஆக்கிரமிப்பு படையுடன் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிராக செயல்படல். சிறீலங்கா அரசுக்கும்-விடுதலைப்புலிகளுக்கும் இந்திய எதிர்ப்பில் உடன்பாடும், பரசுபரஉதவிகளும், பேச்சுவார்த்தையும்

1990 மார்ச்சு மாதம் இந்திய ஆக்கிரமிப்பு படை பின்வாங்கல். மாகாண அரசுதலைப்பு புலிகளுக்கும் -அரசுக்கும் திரை மறைவு பேச்சு தொடர்தல், ஜே.வி.பி தலைமை அரசால் அழிக்கப்படுதல், யூனில் மீண்டும் அரசு -புலிகள் யுத்தம்தொடங்கியது.

1991 விடுதலைப்புலிகள் வடக்கு பகுதியிலிருந்து தமிழீழ முசுலீம் மக்களை 24 மணிநேர கெடுவில் வெளியேற்றி அகதிகளாக்கியது, (இது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டப் போராட்டத்தில் புலிகளின் இரண்டாவது பெரிய தவறாகும். போராட்டத்தை [illegible] அகநிலையில் பலவீனப்படுத்திய களங்கப் படுத்திய செய்கையாகும்; )
இந்திய-இலங்கை ஒப்பந்த நாயகன் ராஜீவ் கொலை, புலிகளுக்கு தடைவிதிப்பு, தமிழ் நாட்டிலிருந்த தமிழீழ அகதிகள் மேல் மத்திய மாநில அரசுகள் நெருக்கடியை கட்டவிழ்த்து விட்டது,

1992 இந்திய அரசு தமிழ் நாட்டிலிருந்த் தமிழ்அகதிகளை திருப்பி அனுப்ப தொடங்கியது தமிழீழ மக்களின் பிரச்சனையை தீர்ப்பதாக நாடகம் ஆடிய பிரேமதாசாவின் "தெரிவுக்குழு" உருவாக்கம், பாராளுமன்ற தமிழ் கட்சிகளின் நாலு அம்சதிட்டம் தொண்டாவின் யோசனைகள், மொத்தத்தில் யுத்தத்தில் கூட பெரும் தேக்கம்.

1993 மே மாதம் பிரேமதாசா, அத்துலத் என முக்கியமான இலவாத அரசுத் தலைகள் தலைநகரில் கொலைசெய்யப்பட்டது, சிறீலங்காவில் உள்ள தமிழீழ தமிழ், முசுலீம் அகதிகள் மீது அரசின் நெருக்கடிகள் உச்சத்தில் இருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள தமிழீழ அகதிகள் மீண்டும் திருப்பி அனுப்ப இந்திய மத்திய மாநில அரசுகள் மூர்க்கத்தனமாக முயல்கின்றது.

1993 இல் "கறுப்பு யூலை" நினைவை ஒட்டி விடுதலைப்புலிகள் சிறீலங்கா இராணுவத்தின் மீது பலமான தாக்குதல்கள். கூடவே கறுப்பு யூலை தினத்தை கொண்டாடும் நினைவு கூரும் உரிமை புலிகள் தங்களைத் தவிர மற்றவர்களுக்கு தடை விதித்து தனது தனியுரிமை சர்வாதிகாரத்தை இரிவம்காட்டியது.
பத்தாண்டு கால யுத்தத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 75000 என மதிப்பிடப்படுகிறது.

இத்தனை நடந்து முடிந்தும் மக்களின் துன்பங்களும் துயரங்களும் தொடர்கிறது, சொந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்டு அதற்கெதிராக போராடும் உரிமை மறுக்கப்பட்டு இலட்சக்கணக்கான மக்கள் போராட்டத்திலிருந்து அன்னியப்படுத்தப்பட்டுள்ளனர், தமிழீழ மக்களின் தேசியக் கோரிக்கைகள் எதுவும் ஏற்கப்படாத நிலை, ஆளும் கட்சிகளின் இலவாத அரசியலும் அரசும், இராணுவமும் இன ஒடுக்கு முறை யுத்தத்தில் உறுதியாக கைகோர்த்து நிற்கிறது, போராட்டத்தை புலிகளே முன்னின்று நடத்துகிறார்கள் ஆனால்

www.tamilarangam.net

விடுதலைப்புலிகளின் முதலாளித்துவ அரசியலும், சுத்த இராணுவ போராட்டங்களும் வெறித்தனமிக்க தனி இயக்க சர்வாதிகாரமும் போராட்டபாதையில் ஏற்படுத்தியிருக்கும் தீய விளைவுகள் கொஞ்ச நஞ்சமல்ல, இன்று போராட்டம் சந்தித்துள்ள தேக்கங்களுக்கு விடுதலைப்புலிகளின் பங்கும் பெரும்பாத்திரம் வகிக்கிறது. அவர்களது அரசியலும் போராட்ட மார்க்கமும் பரந்துபட்ட தமிழீழ மக்களை. அவர்களது ஏனைய சனநாயகக் கோரிக்கைகளை தேசியகோரிக்கையுடன் இணைக்கும் சக்தி அற்றது என்பதுமட்டுமல்ல அவற்றுக்கும் பரந்து பட்ட மக்களுக்கும் எதிராக செயற்படுவது, இதனுடன் விடுதலைப்புலிகளின் தனி இயக்க சர்வாதிகாரம் தமிழீழ மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு தேசபக்த சனநாயக சக்திகளை புரட்சிகர இயக்கங்களின் செயற்பாட்டை திட்டமிட்டு தடுக்கிறது. இதனால் தேசியக் கோரிக்கையில் தமிழீழ மக்களின் பக்கம் ஒன்றுபட்டு நிற்கும் சக்திகள் சிறீலங்கா அரசை எதிர்த்து தமிழீழ சுதந்திரத்தை வெல்ல ஒன்றுபட்டு போராடுவதையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தத்துவமும் செயற்பாடுகளும் தடுக்கிறது. இது எதிரிக்கு தமிழீழ மக்களின் முழு எதிர்ப்பு சக்தியையும் ஒன்றுபடுத்த தடையாகவுள்ளது எதிரிக்கு இவை சாதகமாக அமைவதுடன் விடுதலைப்புலிகள் இத்தனை இழப்புக்களுக்கு பின்னும் போராட்டம் மோசமான தேக்கத்தை அடைந்துள்ள வேளையிலும் தங்களை சிறிதாவது திருத்திக் கொள்ள தவறுவதால் இதனை தமிழீழ மக்களின் எதிரிகளுக்கு விடுதலைப்புலிகள் செய்யும் சேவையாகவும் மாறிக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் அரசாலும் போராளிகளை முழுமையாக நசுக்கிவிட முடியாது, போராளிகளாலும் அரசை வெல்ல முடியாது போராட்டம் முன்னேற முடிய முடியாமலும் தோல்வி என்ற நிலைக்கு செல்லாததுமான "தளம்பல்" நிலையில் அதிகாரத்தை கூட்டுவது அல்லது குறைப்பது என்ற அளவில் அரசியல் அரங்கிலான இராஜதந்திர நடவடிக்கைகளும் இதற்கு இசைவாக பலத்தை பொருத்து இராணுவ நடவடிக்கைகளும் நடந்து கொண்டிருக்கிறது. போராட்டத்தின் முன்னேற்றம் வெற்றிவாகை பற்றி எங்கு நோக்கிலும் அவ நம்பிக்கை கீற்றுக்களே நம்பிக்கை கீற்றை மீறி வெளிப்படுகிறது. ஏதாவது ஒரு வகையில் சமாதானம் அது அரசு கொடுத்தாலும் புலிகள் கொடுத்தாலும் சரி கடவுள் கொடுத்தாலும் (ஏகாதிபத்தியங்கள்) சரி என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. சிறீலங்கா அரசும், திசை மாறிய ஆயுதபாணி தலைமைகளும் போராட்டத்தின் பிராந்திய, சர்வதேசிய (போலி நண்பர்களும் தமிழீழ போராட்டத்தையும் போராளிகளை ஒரே பிடியில் நசுக்குவதற்கும் தமிழீழ மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை கூட மறுத்து ஒரு சமாதானத்தை? ஒரு அமைதியை? ஏற்படுத்த எழுதப்படாத ஒப்பந்தத்தின்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்திய அரசும், மேற்கத்திய அரசுகளும் சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்துக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும், வியாபார நோக்கிலும் ஆதிக்க இராஜதந்திர அடிப்படையிலும் அரசியல், இராணுவ, நிதி உதவிகளை வழங்குகிறார்கள். இந்நாடுகளில் போராளிகளின் செயற்பாடுகளுக்கு தடைவிதித்தும், அப்பாவி மக்களை நாடு கடத்திக் கொண்டும் இருக்கிறார்கள். வெளி நாடுகளில் வாழும் அகதிகளின் வாழ்நிலைக்கும் உரிமைகளுக்கும் உத்தரவாதமில்லை, நிர்ப்பந்தம் மூலம் அகதிகளை திருப்பி அனுப்ப முயற்சிக்கிறார்கள் குறிப்பாக இந்திய அரசு இலங்கையில் தமிழ் மக்கள் படும் இன்னல்களை, போராட்டகளத்தின் உண்மைச் செய்திகளை அறியவிடாது தடுக்கப்படுகிறார்கள், தமது சகோதரர்படும் துன்பங்களை தெரிந்து கொள்ள அதற்கு காரணமானவர்களை கண்டிக்க, போராளிகளின் போராட்டத்தை ஆதரிக்க அனுமதிக்கிறார்கள் இல்லை இந்த சூத்திர தாரிகளை தமிழீழ விரோதிகளை மக்கள் அடையாளம் கண்டுவருகிறார்கள்.

www.tamilarangam.net

கடந்த பத்தாண்டுகள் தமிழீழ மக்களுக்கும் போராளி இயக்கங்களுக்கும் கணக்கிட முடியாத அனுபவங்களை அள்ளித் தந்திருக்கிறது. தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப்போராட்டம் இன்று எதிர் நோக்கும் தடைகளை தாண்டி முன்னேற வேண்டும் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை வெல்லப்பட வேண்டும், தமிழீழ தேசிய அரசு நிறுவப்படவேண்டும் இது காரிய சாத்தியமாக வேண்டுமானால் தமிழீழ தேசியப் போராட்டமும் பரந்துபட்ட மக்களின் சனநாயப் போராட்டமும் ஒத்திசைவான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமே தேசிய சுதந்திரத்தை இந்த ஏகாதிபத்திய கால கட்டத்தில் வெல்ல முடியு ம் என்பதை போராளிகள் உணர்வு பூர்வமாக உணரவேண்டும். ஒரு புரட்சிகர, தேசபக்த விடுதலை இயக்கத்தின் உருவாக்கமும் வளர்ச்சியும் தான் இதற்கு உத்தரவாதமாகும். இந்நோக்கில் இருந்து செயற்படுபவர்கள் தாங்கள் வாழும் தளங்களில் 1983 "கறுப்பு யூலை" தினத்தை நினைவு கூர்வதும் அதையொட்டி சாத்தியமான வழிகளில் அந்நாடுகளிலுள்ள முற்போக்கு தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளின், வெகுசனங்களின் ஆதரவுடன் துக்க அனுட்டானங்களை, அறைக்கூட்டங்களை, ஊர்வலங்களை தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் நடத்தவேண்டும்

அவை அரசியல் அரங்கில் மிகச் சிறிய நடவடிக்கைகளாக தாக்கம் குறைந்தவையாக இருப்பினும் செய்யப்படவேண்டும் புரட்சிகர தமிழீழ தேசபக்த விடுதலை அமைப்புருவாக்கத்துக்கும் வளர்ச்சிக்கும் உயிரோட்டத்தை பெற்று கொடுக்கும் என்பது நிதர்சனமானது.

— வாணி —

(குறிப்பு) 24/07/93 அன்று இலண்டன் வாழ் தமிழீழத்தவர்கள் "83 யூலையை" கறுப்பு யூலையாக நினைவு கூர்ந்து பொது ஊர்வலம் ஒன்றையும் இறுதியில் பொதுக் கூட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளார்கள். ஊர்வலத்தில் " தமிழீழ மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு" "ஐரோப்பிய அரசுகளின் உதவி தமிழீழ மக்களை கொல்ல உதவுகிறது"........போன்ற சுலோகங்களை ஏந்திச் சென்றனர். இலண்டனில் வியாபார நிறுவனங்களை நடத்தும் தமிழர்கள் துக்க அனுட்டிப்பை வெளிப்படுத்த நிறுவனங்களை மூடியிருந்தனர். ஊர்வலம், பொதுக் கூட்டங்களில் 'குர்திஸ்தான் விடுதலை முன்னணி' 'எல்சல்வடோர் விடுதலை முன்னணி' இயக்கங்கள் கலந்து கொண்டு ஆதரவு தந்தனர்

**********************************************

ஆறுமணிச் செய்தி—
முடிகையிலேதான் கேட்டேன்
பூமி பிளந்து
என்னையே விழுங்குவதாய்
உணர்வு வந்தது

முகமறிந்த சிலரதும்
முகமறியாப் பலரதுமாய்
ஐம்பத்து நால்வரின்
நினைவுகளும் முகிழ்த்தது
ஒளியிருந்த நாட்களை
எமது மண்ணில் நிறுவ
துயர் மிகுந்த நாட்களை
உறுதியோடு கடந்தீர் ........
விடுதலை பெறும் எனது நாட்டை
பார்க்க அந்தகன் ஒருவனுக்கு
அளியுங்கள் விழிகளை,
[illegible]

நா. சபேசன்—

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*****************************************

தேசிய விடுதலைப் போராட்டம் ஓர் மீளாய்வை நோக்கி---

*****************************************

"தமிழீழ விடுதலையில் எமக்கும் பங்கு வேண்டும். ஏழ இயக்கங்கள் அதனை ஏற்க வேண்டும்." என்ற பாடல் வரிகள் 1983க்கு பின்னர் யாழ்குடா நாட்டில் உள்ள வறிய கூலி விவயாசிகள் வாழ்கின்ற கிராமங்கள் எல்லாம் மக்களைத் தட்டி எழுப்புகின்ற வரிகளாக இருந்தன. வறிய கூலி விவசாயிகள் மத்தியில் தொழிற்சங்கப் பணிபுரிந்த கிராமிய உழைப்பாளர் சங்கத்தினால் மேடையேற்றப்பட்ட "சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" என்ற நாடகத்தில் வெளிவந்த வரிகளே அவை. இச்சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள் நாடகம் வறிய கூலி விவசாயிகளின் பிரச்சனைகளை மையமாக வைத்து எழுதப்பட்டது. 1980களில் இந்நாடகம் மேடையேற்றப்பட்ட போது வறிய கூலி விவசாயிகளின் பிரச்சனைகளை மட்டும் வெளிப்படுத்துவதாக இருந்தது. 1983இன் பின்னர் அதனை மீளவும் மேடையேற்றிய போது வறிய கூலி விவசாயிகளின் பிரச்சினையை தேசிய இனப்பிரச்சினையோடு இணைந்திருந்தது. தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் போது அத்தீர்வு வறிய கூலி விவசாயிகளின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதாக அமைய வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில் அமைத்திருந்தார்கள். இந்நாடகம் சாதியால் தாழ்த்தப்பட்ட மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட வறிய கூலி விவசாயிகளை உணர்வுரீதியாக தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றச் செய்ததோடு அவர்களின் பிரச்சினைகளில் விடுதலை இயக்கங்கள் அக்கறை கொள்ள வேண்டிய சூழ்நிலையையும் தோற்றுவித்தது.

இந்நாடகத்தைப் பற்றியும் அதனை மேடையேற்றிய கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் பணிகளைப் பற்றியும் ஆராய்வதற்கு முன்னர் வறிய கூலி விவசாயிகள் என்போர் யார்? அவர்களின் பிரச்சனைகள் என்ன? அவர்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்திய அரசியல் சக்திகள் யார்?யார்? என்பதைச் சுருக்கமாக அறிதல் அவசியமானதாகும்.

வறிய கூலி விவசாயிகள் என்போர் யாழ்குடாநாட்டு செம்மண் பிரதேசங்களில் மிகவும் அடிமட்டத்தில் வாழ்கின்ற மக்கள் பிரிவினராவர். இவர்களில் வறிய விவசாயிகள் என்போர் மிகவும் சிறிய நிலப்பரப்பில் யாழ்ப்பாண விவசாயிகளின் வார்த்தைகளில் சொல்வதானால் ஆயிரம் கன்றுக்கு குறைவான நிலப்பரப்பில் சொந்தமாக விவசாயம் செய்வதுடன் கூலி உழைப்பிலும் ஈடுபடும் பிரிவினராவர். கூலி விவசாயிகள் என்போர் மண்வெட்டியை மட்டும் சொந்த உடைமையாகக் கொண்டு கூலி உழைப்பில் ஈடுபடும் விவசாயிகள் ஆவர். இவர்களில் பெரும்பான்மையோர் ஏறத்தாழ 95% தினர் சாதியால் தாழ்த்தப்பட்ட பள்ளர், நளவர் சமூகத்தை சேர்ந்தவர்களாகவே விளங்கினர். இவர்கள் அடிமட்டத்தை சேர்ந்தவர்களாக இருந்தமையினால் வர்க்க ரீதியான ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்த அதேவேளை தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தமையினால் சாதி ஒடுக்கு முறைக்கும் முகம் கொடுக்க வேண்டி இருந்தார்கள். சில இடங்களில் வர்க்க ஒடுக்கு முறையை விட சாதி ஒடுக்கு முறைக்கே அதிகளவில் முகம் கொடுக்கவேண்டியிருந்தது. குடியிருப்புப் பிரச்சனை இவர்களுக்கு பெரிய பிரச்சனையாக இருந்தது. இவர்களில் கணிசமானவர்கள் உயர்வேளாள சாதியினரின் நிலங்களிலேயே குடியிருந்தனர். ஏனையவர்கள் கிராமங்களுக்கு புறம்போக்காக காணப்பட்ட கலட்டுத்தரைகளிலும் மயானத்தை தாண்டிய இடங்களிலும் குடியிருந்தனர். இவர்களுடைய குடியிருப்புகளுக்கு ஒழுங்கான போக்குவரத்துப்பாதை கிடையாது.

www.tamilarangam.net

---மின்சாரம் கிடையாது. படிக்கும் மாணவர்களுக்கு ஒழுங்கான பாடசாலை கிடையாது. பெயருக்கு என இருக்கும் பாடசாலைகளில் கூட ஒழுங்கான கட்டிட வசதிகளோ, தளபாடவசதிகளோ கிடையாது. ஆசிரியர்களும் போதிய வகையில் இல்லை. இருக்கிறவர்களும் உயர்சாதியைச் சேர்ந்தவர்களானபடியால் கற்பிப்பதில் போதிய அக்கறை செலுத்துவதில்லை. கோவில்கள் இவர்களை அனுமதிப்பதில்லை. நுளுக்கமாக அவதானிப்போமாயின் வெளியே தெரிகின்ற யாழ்ப்பாண சமூகத்திற்கு புறம்பாக வெளியே அதிகளவில் தெரியாத இருண்ட சமூகமாக இவர்கள் விளங்கினர்.

இவ்விருண்ட சமூகத்தில் அரசியல் பணியாற்றி ஆரம்பத்தில் கொஞ்சமாவது இம்மக்களை விழிப்படையச் செய்தவர்கள் சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியினரேயாவர். 1960 களில் நடைபெற்ற சாதிப்-போராட்டங்களுக்கு இவர்களே தலைமை தாங்கினர். இம்மக்கள் தங்கள் ஒடுக்குமுறைக்கு எதிராக வன்முறையை பயன்படுத்த ஆரம்பித்த பின்னரே உயர் வேளாளரின் கட்டுப்பாட்டில் இருந்த ஆலயங்கள் இவர்களுக்கும் திறக்கப்பட்டன. பாடசாலைகளில் அனுமதி அளிக்கப்பட்டன. தேனீர்க்கடைகளில் சம உரிமை வழங்கப்பட்டது.

இச்சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் பணிகளின் தொடர்ச்சியாகவே அக்கட்சியிலிருந்து வெளியேறிய குழுவினரால் கிராமிய உழைப்பாளர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறிய சௌரிகாந்தன், பாலசிங்கம், சின்னராசா போன்றவர்கள் வேறுசிலரையும் சேர்த்து 1980 களின் பிற்பகுதிகளில் இச்சங்கத்தை தோற்றுவித்தனர். இவர்களோடு சேர்த்தவர்களில் சிறீதரன், மகாலிங்கம், தங்கராசா, ஜெகநாதன், யோதிலிங்கம், ஜீவரத்தினம் ஆகியோர் முக்கியமானவர்களாக விளங்கினர். சௌரிகாந்தன் இதன் செயலாளராகவிருந்தார். இவர்கள் தேசிய இனப்பிரச்சனையில் அக்கறை செலுத்தாததோடு தமிழ்மக்களின் பிரிந்து போதலுடன் கூடிய சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக் கொள்ளாததினால் ஜோதிலிங்கம், ஜீவரத்தினம் போன்றோர் சங்கத்தை விட்டு வெளியேறினர்.

இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நடைமுறையில் தங்கள் வேலைகளை நகர்த்த ஆரம்பித்தபோது கூர்மையடைந்து வந்த தேசிய இனப்பிரச்சினை தொடர்பான கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அமைப்பிற்குள்ளும் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான கேள்விகள் காரசாரமாக எழுந்தன. 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து தேசிய எழுச்சி ஏற்பட்ட போது தேசிய இனப்பிரச்சினை தொடர்பான கேள்விகள் மேலும் எழுந்தன. இதனால் இவர்கள் அமைப்புக்குள் காரசாரமான விவாதத்தை நடத்தினர். விவாதத்தின் முடிவில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு பிரிந்து போதலுடன் கூடிய சுயநிர்ணய உரிமையே என்ற முடிவுக்கு வந்தனர். ஆனால் தேசிய இனவிடுதலை என்பது அதற்குள் அடங்கும் வறிய கூலி விவசாயிகளின் விடுதலைக்கும் வழிசமைப்பதாக இருக்க வேண்டும் என வலியுறுத்தினர். இம்முறைகளின் அடிப்படையிலேயே சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள் என்ற தங்களது நடைமுறையிலும் மாற்றங்களை செய்திருந்தனர்.

தேசிய விடுதலைக்காகப் போராட வேண்டும். வறிய கூலி விவசாயிகளையும் அப்போராட்டத்தில் பங்கு பெறச் செய்தல் வேண்டும் என இவர்கள் முடிவெடுத்த சமயத்தில் இவ்வமைப்பின் பொதுச் செயலாளராக இருந்த சௌரிகாந்தன், சிறீதரன் போன்றவர்கள் புளொட் இயக்கத்தில் சேர்ந்து கொண்டனர்.

www.tamilarangam.net

ஜெகநாதன் ஈ.பி.ஆர்.எல்.எப். இல் சேர்ந்து கொண்டார். கௌரிகாந்தன் வெளியேறுகைக்கு பின்னர் அமைப்பின் பொதுச்செயலாளராக மார்க்கண்டு தெரிவு செய்யப்பட்டார்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற வேண்டும் என்ற முறைக்குப் பின்னர் தேசிய இனப்பிரச்சினைகளில் இவர்கள் அதிகளவு அக்கறை காட்டினர். வறிய கூலி விவசாயிகள் கிராமங்களில் மாத்திரம் மேடையேற்றிய தமது "சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்" நாடகத்தினை சகல கிராமங்களிலும் மேடையேற்றும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இதன்மூலம் உயர்சாதியைச் சேர்ந்தவர்களும் வறிய கூலி விவசாயிகளின் பிரச்சினைகளை அறிவதற்கு வழி செய்ததோடு வறிய கூலி விவசாய மக்களுக்கும் தேசிய இனப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினர். 1983 வரை தேசிய இனப்பிரச்சினைபற்றி அக்கறை கொள்ளாதிருந்த வறிய கூலி விவசாயிகள் 1983 இன் பின்னர் அலைஅலையாக இயக்கங்களில் சேர்ந்து கொண்டனர் என்றால் இவர்களின் பங்களிப்பே அதற்கு பிரதான காரணமாக இருந்தது.

ஆக்கம்—அன்னபூரணா. நன்றி—சரிநிகர்.

**********************

---

## சேவல் கோழிகள்

விடியுது! விடியுது!!.
போர்முள் அரும்பாத கோழிச் சேவல்கள்
அடிச்சுக் கூவுது

கூவுற சேவல்
கொழுப்புக் கண்டு
சுவடு பிடிச்சு
மரநாய் வருகுது
மோப்பம் பிடித்து
அலைந்து திரியுது
சேர்க்கையில் வைத்தே
பிடிக்க வளையுது
கத்திப் பறந்து
சேர்க்கை கலையுது

விடியும்! விடியும்!!
அடிச்சுக் கூவுது
போர்முள் முளையா
வெடிவால் சேவல்
அடிச்சுக் கூவுது;

மரநாய்
பதுங்கிப் பதுங்கி வந்து
கழுத்தை நெரித்துக்
குஞ்சைப் பிடிச்சுக்
குமறக் குமறக்
கொண்டு போகுது.

கொக்கரிச்சுக் கோடிக் கோழி
கலையுது
அச்சமும் பச்சமும்
ஆரோ உரப்புகினம்.

கோழியைக் கூட
அதுகொண்டு போட்டுதாம்
நாளைக்கு
நிச்சயம் விடியும் விடியும்
அடிச்சுக் கூவுது
சேவல்; கோழிகள்.

ஆக்கம்—கல்வயல் வே.குமாரசாமி
(தமிழீழக் கவிஞர்)
நன்றி. பனிமலர்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ மக்களால் நினைவு கொள்ளப்படவேண்டிய சிங்கள சகோதரன்

# H.N. பெர்ணன்டோ காலமானார்



இலங்கை ஆசிரியர் சங்கத்தில் நீண்டகாலம் தலைவராகவும் பின்னர் அதன் செயலாளராகவும் பணியாற்றிய, அனைவராலும் செல்லமாக H.N. என அழைக்கப்பட்ட தோழர் H.N. பெர்ணன்டோ திருச்சியிலுள்ள தனியார் மருத்துவ மனையொன்றில் கடந்த வியாழக்கிழமை (ஆகஸ்ட் 05, 1993) இரவு காலமானார்.

கொடூரமான வியாதியால் பீடிக்கப்பட்டு ராகம வைத்திய சாலையிலும் பின்னர் கொழும்பு பிரதான வைத்திய சாலையிலும் கடந்து மூன்று வருடகாலமாக சிகிச்சை பெற்று வந்த தோழர் எச். என். அவர்களைக் குணப்படுத்த இலங்கையிலுள்ள மருத்துவர்களும் பேராசிரியர் கார்லோ பொன்சேக அவர்களும் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. இந் நிலையில் அவர் கடந்த ஜூலை 22ம் திகதி திருச்சியிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

தனது 50 வது வயதில் காலமான தோழர் H.N. அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்திற்காக தனது முழு வாழ்க்கையையுமே அர்ப்பணித்தார். கிராமங்களிலும் காடுகளிலும் மலைகளிலுமாக பல மைல்கள் நடந்து ஆசிரியர்களை தமது உரிமைக்காக போராட அணிதிரட்டிய H.N. இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றில் மறக்கப்பட முடியாத ஒரு மனிதன். பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் சமசம்பள போராட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கமும் H.N. பெர்ணன்டோவும் ஆற்றிய பங்கு அளப்பரியது. இலங்கையின் தென் பகுதி, மலையகம் மட்டுமல்ல வடக்கிலும் கிழக்கிலும் கூட H.N. பெர்ணன்டோ பற்றி அறியாத ஆசிரியர்களோ, பாடசாலைகளோ இல்லையென்றே கூறலாம்.

1956 ம் ஆண்டு மொரட்டுவை வித்தியாலயத்தில் 13 வயது மாணவனாக இருந்த காலத்திலேயே தனிச் சிங்கள சட்டத்திற்கு எதிராக பேசிய காரணத்தால் சக மாணவர்களால் தாக்கப்பட்டு காயங்களுடனேயே தோழர் H.N. அன்று வீடு திரும்பினார். வட்டுக்கோட்டை மாநாட்டுக்கு முன்னரேயே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை– பிரிந்து போகும் உரிமையை அங்கீகரித்து இலங்கை ஆசிரியர் சங்க மகாநாடுகளிலும் குருநாகலை, மொனராகலை, மாத்தறை அம்பாந்தோட்டை அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளிலும் பேசியதன் மூலம் இலங்கை இடதுசாரி இயக்கத்துக்கும் அதனுடன் பிணைந்த தொழிற்சங்க இயக்கத்திற்கும் H.N. ஒரு முன் உதாரணமாக திகழ்ந்தார்.

தேசிய இனப்பிரச்சனை, தொழிற் சங்க நடவடிக்கைகள் தொடர்பாக ஜே.வி.பி. தலைமை தவறு இழைத்தபோது, ரோகன விஜேவீர தனது சகோதரியின் கணவன் என்பதைப் பற்றிக் கூட சிரத்தை கொள்ளாமல் ஜே.வி.பி. தலைமையுடன் மோதி வெளியேறியதன் மூலம் கொள்கைகளில் தான் கொண்டிருந்த உறுதியை நிரூபித்தவர்தான் இந்த மனிதன்.

ஜூலை மாதம் 22 ம் திகதி கட்டுநாயக விமான நிலையத்தில் அவரை இறுதியாக சந்தித்த தோழர்களை பார்த்து "தோழர்களே! நான் திரும்பி வருவேன், வேலைகளைத் தொடருங்கள்" எனக் கூறிய தோழர் H.N. இன்று எம்மிடம் இல்லை.

தோழர் H.N. அவர்களே.
எமது புரட்சிகர
வணக்கங்கள்
என்றென்றும் உமக்காக!

நாம் இன்னமும்
சுவாசிக்கிறோம் உங்களைப்
போன்ற மனிதர்களும்
எமது நாட்டில
வாழ்கிறார்கள் என்னும்
நம்பிக்கையில்தான்!
உமது தோழர்கள்

தகவல் செ. லோகநாதன்

வாசகர்களே! "தேசபக்தனை"
சக தோழர்களின் கைகளுக்கு தவறாது கைமாற்றி உதவுங்கள்.
பங்களியுங்கள்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்